உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி உ.	நள ௵ மாசி ௴ 1917 ௵ பிப்பிரவரி ௴	பகுதி க.

புதல்வர் கடமை.

(முதல் தொகுதி 348-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கிழத் தாயை அவமதித்து அடித்து வீழ்த்திய நன்றியில் மகனது புன்செயலை இதுகாறும் இழித்துக் கூறிய நாம், இனி அவ்விஷயத்தைப் பிரசுரித்துக் கொள்ளும் சுதந்தரம் எமக்கு அளித்தபிரமஞார் ஸ்ரீ வில்லியப்பப் பிள்ளை குமாரர் ஸ்ரீ: காசிவிசுவநாத பிள்ளைக்கும், ஸ்ரீ: இ. ராம குருசாமிக் கோனுருக்கும் நன்றி கூறி, இக்கதை சம்பந்தமாக ஆராய்ந்து நோக்குந்தோறும் அறிந்துரைக்கூடிய பிற விஷயங்களிற் சில பேசுவோம். "மரியாதை" சம்பந்தமாக நாம் கூறி வரும் பொழுது, இவ் விஷயம், "மற்றொன்று விரித்தல்" போற் காணப்படினும், அன்னமை ஆகாது, விஷய சம்பந்தமாகப் பொருந்தப் பொருந்தத் தக்கதொன்றே என அறிஞர் அறியாநிரார்.

"மாமியும் மருகியும் மருவி வாழ்வது, பூமியில் அரிதெனப் புகலல் பொய்யிலை"; பல நூல்களைக் கற்றுணர்ந்தும், வித்வான்கள் வறுமைத் துன்பம் உறுவதற்கு ஒரு விநோத காரணம் 'நாலடியார்' கூறுகின்றது. அஃதென்ன வெனில், நாமகளாகிய சரஸ்வதி வித்வான்களிடம் தங்கி இருக்கும் காரணத்தால் பூமகளாகிய லக்ஷ்மி பிணங்கி அவளொடு ஒத்திருப்பதில்லை; செல்வநாயகி (லக்ஷ்மி) மாமியும், வித்யாநாயகி (சரஸ்வதி) மருகியும் ஆகலால்." என்பதே.

"பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்து
அல்லல் உழப்ப(து) அறிதிரேல்—தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து".

என்று இது, ஒரு விநோதக் கூற்றே யாயினும், மாமி மருகியர் இயல்பைப் பற்றிய உண்மை இதில் எவ்வளவு அடங்கியுள்ளது பாருங்கள்!

இவ்விருவரும் ஒத்து வாழாமைக்குப் பெரும்பாலும் மாமியே காரணமாவள் என்பதை அநுபவசாலிகள் அறியாதிரார். கல்வியறிவில்லா மூட மாமியரின் கீழ் இருந்தோ, அவர்களது ஸ்தானத்திலிருந்து அதிகாரம் வகிக்கும் கெடுமதி வாய்ந்த கிழவிகளின் கீழிருந்தோ, சிறுபெண்கள் இருந்து வாழப் பெரும்பாலும் ஏற்பட்டு விடுகிறது. விடவே, இவ்வதிகாரப் பிரியர்கள், தமது துர்க்குணங்கட்கு இசைந்து நடப்போரை அவர்கள் அங்ஙனம் நடக்கும் வரை பத்து அத்யாயம் ஸ்தோத்திரம் பண்ணி, அவற்றிற் கிசையாத மருகியர் மீது அபாண்டமான பழிகளை ஏற்றிக் கூறி, அவர்களது சின்னஞ்சிறு பிழைகளைப் பென்னம் பெருங்குற்றங்களாகக் கொண்டு நிந்திப்பதையே, தமக்குப் பொழுது போக்காகவும், பெருமையாகவும், எக்காரணம் பற்றியேனும் அவர்கள்பால் தமக்குள்ள க்ஷாத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளும் வழியாகவும், கருதித் திரிகின்றனர்.

குற்ற மற்ற மருகியர், இவர்களது கர்ண கடூரமான 'சகஸ்ர நாம அர்ச்சனை' கட்கு அஞ்சி ஒடுங்கி வாய்திறவாதிருப்பின் உடனே அதிகாரம் வகிக்கும் அறிவிலிகள், அவர்களைக் குறித்துத் தாம் சொல்லிய யாவையும் ஸ்திரப்படுத்தி விடுவதும், அவர்கள் நேர்மை கருதித் தைரியமாய் எவ்வளவு மரியாதையுடன் மறுத்து உண்மை கூறினும், அவர்களுக்கு 'வாயாடி', 'பட்டி,' 'அடங்காப் பிடாரி' முதலிய பட்டங்கள் கட்டி, அகங்காரமும் ஆகுலையும் முன்னிலும் கொள்வதும் சகஜம்.

இக்கொடியர்கள் தமக்குப் பிடிக்காத மருகியரை இங்ஙனம் நடத்துவதும் முற்றும் அடாத முறைகேடான செயல்களே என்று வீட்டிலுள்ளோர்க்கும், அவர்களிடம் வம்புவளர்க்க வருவோர்க்கும் நன்கு தெரிந்திருந்தும், அவர்கள் எதும் இடித்துக் கூறுவதில்லை. ஏனெனில், அவர்களிற் சிலர், வெகுநாட் பழகிய தோஷத்தால் தாக்ஷிணியம் பற்றி மௌனம் சாதிக்கின்றனர். சிலர் அசட்டுப் பயத்தால வாயே திறவாதிருக்கின்றனர்; சிலர் எவ்விதமேனும் தமக்குக் கிடைக்கும் அற்ப வரும்படி கருதிச் சும்மா இருந்து விடுகின்றனர். சிலர் 'எது எக்கேடு கெட்டுப் போனாலும் நமக்கென்ன? இந்த நமன் நம்மிடம் வராதிருந்தால் சரி' என்று வேடிக்கை பார்க்கின்றனர். "சொல் வன்மை உண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல் கல்வினை கோறலின் வேறல்ல" என்பதை மதியாத இவர்களது மௌனத்தால் ஏற்கனவே அகங்காரப் பேய் பிடித்தோரின் விருப்பு அதிகரித்து முன்னிலும் பல அனர்த்தங்கள் மூளுகின்றன.

இவர்களால் நேரிடும் அநர்த்தம் ஒருபால் இருக்க; கரந்துறையும் நாகம் போல் மறைந்து புறங்கூறித் திரியும் இழிகுணப பாவியர் சிலர், கூறு கெட்ட இக குரூர சிந்தையாருடன் தாம் ரகஸ்யமாகப் பேசும் போது, ஆதரவற்ற பெண்கள் மீது அடாப்பழி சுமத்தி விடுகின்றனர். 'சோட் செவிக் குறளைக் காற்றுடன் நெருப' பன்றோ? தமக்கும் சுகமின்றிப் பிறர்க்கும சுகமின்றி வயவஞ்சகம் செய்யும் இந் நாசகாலிகளாலேயே, கரும்பு போன்றிருந்தோரும வேம்பினும் வெறுக்கப் படுகின்றனர் வீடும் இரண்டுபட்டு விடுகிறது எங்ஙனமெனில், இவர்கள் சொல்லை நம்பி மருமக்களைத் தாம படுத்தும் பாட்டைக் காணச் சகியாத இரண்டொரு உத்தமர்களிடமும் இம்மாமியர் பகை பூண்டு, அவர்களது மனைவியருடன், மக்கள் முதலிய பிற உறவினரையும் சத்ராதிகளாக மதித்து, அவர்களுக்கு அநுகூலர்களாய் அவர்களுடன் ஒற்றுமையொடும் அன்பொடும் கூடி வாழ்வோரையும் பிரித்து, அவர்களை உயிருடன சித்திர வதையே செய்து வருகின்றனர். இத்தகைய துவேஷ புத்தியால் மகனிடம் தாய்க்கு இயற்கையில் உள்ள அன்பெலாம் போய்விடுகிறது உள்ளபடியே மருகி மீதும், அவட்குப் பரிந்து பேசும மனச சாக்ஷியுள்ள மகன் மீதும உள்ள க்ஷாத்திரத்தால்,

"அருமை மகன் செத்தாலென்? அறுதலியாய் என்னுடைய
மருமகளைக் கண்டு மகிழும் நாள் எந்நாளோ"

என்று 'எந்நாட் கண்ணி' பாடிவிடுகின்றனர். இங்ஙனம் பாடும் இயல்பினர் பலரை நாம் நேரக் கண்டுளோம். நிற்க.

மருகியா சகல நற்குணங்களும் வாய்ந்தவளெனினும், அவர்களைக் குறை கூறுவது மாமியர் இயல்பாயின், அகந்தையும் அடக்கமின்மையுமுள்ள மருமகளை நம் கிழ மாமி சும்மா விடுவாளா? வெறும் வாயை மெல்லுவோர் அவல் வாயை மெல்வதும வியப்போ?

இங்ஙனம் நாம் கேட்பதால் கிழவி தன் மருமகளைக் கண்டபடி நிந்தித் திரைந்தது சரியென யாம் ஒப்புக்கொண்டதாக எவரும் எண்ணற்க. எவ்வளவு வயிற் றெரிச்சல் அவளுக்கு இருந்த போதினும், அவள் அதனைத் தன மகனிடம் தக்கவாறு கூறித் தணிக்கப் பரிகாரம் தேட வேண்டுமே யன்றி, ஊரார் வீட்டு அநாதைப் பெண்ணை இங்ஙனம் திட்டி, ஊர் சிரிக்கும்படியான காரியம செய்தது முற்றிலும் தவறே. மருகி மாமியினும் வாயாடியும் அடங்காப்பிடாரியுமாக இருந்ததால் தான் அவள் கைமேல் போனது. அவள் வாயில்லாப் பூச்சி போல் இருந்திருப்பாளாயின், அறிவிழந்து அகங்காரமே மிகுந்த மாமியால் அவள், அடைந்திருக்கக கூடிய துர்த்திசையை யோசித்துப் பாருங்கள்.!

இங்ஙனம் மாமியைக்குறை கூறியதால், மருகியின் செய்கையையாவது மகன் செய்கையையாவது நாம் அரைக்கணமேனும்

அங்கீகரித்தோம் என எண்ணற்க. இம்மகாத் துரோகிகளை நினைக்குந்தோறும் "லியர் மகா ராஜன் கதை"யில் உள்ள ஓர் உவமை நம் ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது—"வெளிச் சிட்டு என்று ஒரு குருவி உண்டு. அது குயிலின் முட்டைகளைக் குஞ்சு பொரித்து இறகு முளைத்து ஓடிப்போகும் வரையில் அவற்றை வளர்க்கிறது. அக்குஞ்சுகள் பறந்தோடும்போது, வளர்த்த பறவை பட்ட வருத்தத்திற்கு மாறாக, அதன் சமூகத்தைக் கடித்து உதறிக் கொன்றெறிந்து ஓடிவிடும்" என்பதே. இக்குயிற் குஞ்சுகளைப் கொடியா எய்தும் கதி யாதோ கூறத் திறமுடையேம்! திக்

உள்ளபடியே, சிறுபிழைகளே பெருங் குற்றங்கட்கு மூலம் என்பதை யாவரும் உணர்ந்தறிய வேண்டும். ஆகவே மாதாபிதாக்கள் எவ்வளவு குற்றங் குறைகளுடன் கூடியிருப்பினும் அவர்களிடம் அலெக்ஸாண்டரைப் போல அதிமரியாதையாக மக்களும் அவர்கள் மனைவியரும் நடந்து கொள்ளவேண்டியது. அவர்களை இயுத்துக் கூறி நல்வழிப் படுத்துவது நம் போன்ற பிறர் செய்கையேயாகும். (2)மாமியினுடைய சின்னச் சின்னப் பேச்சு, சிங்காரப் பேச்சுகளினாலேயே இனி மாமியாக வேண்டிய மருகி, நாளடைவில் "படிறும், பயனிலவும் பட்டியுரையும் வசையும் புறனும், (அவளையும், அவளுக்கு ஒத்தூதப் பாடுவோரையும் குருவாகக் கொண்டு) கற்றுக் கொள்கிறாளல்லவா? ஆகலால் மக்களிடமும் மருமக்களிடமும் வீண் அகங்காரமும் அருமையும் காட்டி அதனால் அவமானமுறுதபடி பெற்றோர் நடந்து கொள்ள வேண்டியது. இவைகளே நாம் சொல்லித் தீர்க்க கடமை பூண்ட விஷயங்கள்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

ஆத்திசூடி வெண்பா.

(முதல் தொகுதி 354—ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈசனே 'வேண்டுவன ஈவேனீ கைக்கொ' ளெனப்
பேசவுமக் கன்னன் பிழையாமல்—நேசிக்கான்
ஏற்பதிறை வனபாலு மேலாமல், ஈவதையே;
ஏற்ப திகழ்ச்சி என

[(இ-ள்) ஈசனே—(மும்மூர்த்திகளி லொருவராகிய திருமாலின் அவதாரமாய அவதரித்த) கண்ணபிரானே, நீ வேண்டுவன—நீ எவ் வெவற்றை விரும்புகின்றனையோ அவையனைத்தையும், ஈவேன்—விரும்பி அநுக்கிரகிப்பேன், கைக்கோள் என—ஏற்று அங்கீகரிப்பாய் என்பதாக, பேசவும்—வலிந்து கூறிய பொழுதும்; அக்கன்னன்—வள்ளல்களிற் சிறந்த அந்த

கர்ணமகாராஜன், பிழையாமல்—(தன் கரம் எவர்க்கும் ஏற்கும் பொருட்டுத் தாழ்ப்பதில்லை யென்பதாகத் தன்னுள் என்றும் கொண்டுள்ள உறுதியிற் சிறிதும்) தவறாமல், ஏற்பது—பெறத்தக்கதையுங்கூட, இறைவன்பாலும்—அக்கடவுளிடத்திலும், ஏலாமல்-யாசிக்க இசையாதவனாகி, ஏற்பது-யாதாமொன்றைப் பெறுவது, இகழ்ச்சி—எளிமையைத் தருவதே, என—என்னும் ஆன்ற வாக்கியத்தினை யுட்கொண்டு, ஈவதையே—தானே எவர்க்கும் கொடுப்பதாகிய குணத்தினையே, நேசித்தான்—(எத்தனை பிறவிகள் மேல்வரினும்) விரும்புவதாகக் குறிப்பிட்டான்.

ஸ்ரீ கிருஷ்ணன் வேதிய வடிவங்கொண்டு, கர்ணன் இறக்குந் தறுவாயில் போர்க்களத்தில் தேரிற் சாய்ந்து, அவன் 'ஆவியோ நிலையிற் கலங்கி யாக்கை அகத்ததோ, புறத்ததோ,'' என்றிருந்ததைக் கண்டும், அவனிடை யாசித்தான். அவன் அப்பொழுது அளிக்கும்பொருள் தன்வசத்தில் அங்கு இல்லையாயினும், தான் பிரதி பலனைக் கருதாது, இரப்போர்க்காறும் கேட்போர்க்கு வரையாது கொடுத்ததினால் உள்ள புண்ணியங்களனைத்தையும் சந்தோஷத்துடனும், அஞ்சாதும் கொடுத்தான். அதுகண்டு வியந்த நாரணன் "நீ வேண்டும் வரங்கள் யாவை? உனக்குத் தருதும்'' என்று அருளியதை அவன் பொறாதவனாகி, "உம்மிடம் 'வரம்' என்னும் பெயரால் ஒன்று பெறினும் அதுவும் சுயநலம் பற்றினையே சுட்டுவதாகும். இப் பிறப்பன்றி எத்தனை யெத்தனை ஜன்மங்கள் வரினும், யான் பிறர்க்கு அளிப்பதையேயல்லாமல் பிறர்பால் ஒன்றை ஏற்பதென்பதை விரும்பேன்.'' எனப் பொருள்படுமாறு "அல்லல்வெவ் வினையால் இன்னம்உற் பவம்உண் டாயினும் எழுபிறப்பும், 'இல்லை'யென் றிரப்போர்க்கு 'இல்லை' யென்னுரையா இதயநீ யளித்தருள்'' என்ன மறுமொழி பகர்ந்தான்—இதைப் படிப்போர், முடிவில் "'இதயம்நீ யளித்தருள்' என்றமையும் ஒரு கோரிக்கை தானே?'' யென வாதிக்கக்கூடும். ஆயினும், அது பொருந்தாது—என்னையெனின்:

சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையு நடைப் பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்

என்றமையால் 'கொடைக் குணம்' அவரவர் செய்யும் நல்வினைப் பயனால் பிறப்பின் இயல்பாகவே அமையத் தக்க தொன்றேயன்றி, அப் பூர்வ புண்ணிய மிலலார்க்குக் கடவுளருளால் அளிக்க வரும் அதிர்ஷ்டங்களில் ஒன்றல்ல வென்பது உறுதி.

கர்ணன், கடவுளை முன்னின்று கூறுவதை மறக்கும் மொழிகளைப் பகரும் போது, உபசார வழக்காக 'அளித்தருள்' எனக் கூறினனென்பதே பொருந்தும். நிற்க.

எக்காரணம் பற்றி அக் கண்ணன் கர்ணனிடம் யாசிக்கத் துணிந்திருந்தாலும், அச் செய்கையில் கர்ணனே புகழ்க்குரிய னன்றிக் கடவுளல்லவெனப்படு தேற்றம். இது பற்றி யன்றோ, தெய்வப் புலமையாரும்,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்''

எனப் "பிரமன் இரத்தலையும் ஒரு செய்தொழிலாகக் கற்பித்தானா யின், அத் தீவினையினாற் றானும் அதத்துன்பம் உறல்வேண்டு"மெனச் சபித் தாராகும். இதனால், இரத்தலின் இகழ்ச்சி நனகு புலப்படுகின்றது. இர த்தலினும் அவமானம் நாவினுக் கில்லை யென்று உரைத்தாராயின இகழ்ச்சி யென்னும் சொல்லே யாசிப்பதைப்பற்றி யென்பது உறுதி.

அவ வேட்கையைத் தடுத்துக் கர்ணன் அக் கண்ணனிடம் மறுத்த மன வலியை வியக்தன்றே, பாரதம இயற்றிய வில்லிபுத்தூ ராழ்வாரும், 'சூரன் மாமதலை' என 'ஆண்மை யுடையோன் மைந்தன்' எனக் குறித்தார் போலும்! சூரியனுக் கெத்தனையோ பெயர்கள் இருப்பவும் தருணம் நோக்கி, இக் கன்னன் அன்றோ 'சூரன் குமாரன் என்றழைக்கத் தக்கவன்' என்பதே அக்கவியின் நுட்பக்கருத் தெனவும் கொள்க.

அசலாம்பிகை அம்மாள்.

விநோதக் கூற்று.

வேங்கடசுப்பன்:—அடே கோண்டம்! னோக்கொரு வாலு காட்ரேன். என்ன சொல்ரே?

கோதண்டம்:—அப்பாடா! ஆருக்குத்தான் தெரியாது? னோக்குக் காட்டுமோ? கசசத்தை வால் இயகப் போறே.

வேங்:—வாலே காட்ரேன் என்ன பந்தயம்?

கோ:—இங்குசசுப்பா! யாரிட்ட இந்த உருட்டு? நீ மட்டும் காட்டு, ரூபா அஞ்சு தர்ரேன்-வாலயே காட்டணும். ஆமா பாத்துக்கோ.

வேங்:—வாலே காட்ரேன். காட்டாமப் போனேனோ நான் தர்ரேன் ரூபா அஞ்சு. (என்று கூறி "தோ! தோ! கறுப்பா! கறுப்பா!" என்று அடுத்த வீட்டு நாயை அழைத்தான். அது வந்ததும், தடவிக்கொடுத்து அதன் வாலைக் காட்டி) இதோ பாரா வால். கொண்டா அஞ்சு ரூபா. வால் உனக்குக் காட்ரேன் இன்னேன். வாலே காட்டினேன். ஏன் தேகத்துலே காட்ரேன் இன்னு சொன்னேன்?" என்றான்.

நரேந்திரநாத் மகாதேவ்.

---

(2) வித்யாபிமானியாகிய போஜராஜனிடம் யானைப் பரிசு பெறக் கருதி ஒரு புலவன் சென்றான். சென்றவனை வாயில் காப்போர் தடை செய்தனர். இதற்குள் அரசனே வெளியில் வர நேர்ந்தது. அவன் புலவனை நோக்கி 'வந்த காரியம் யாது?' என, புலவன், "வேந்தே! உம்மிடம ஒரு வாரணம் பெற வந்தேன். என் அதிர்ஷ்டம் என்ன அர்ஷ்டம்! உம்மைக்காண உள்ளே அடியெடுத்து வைக்குமுன் இவ்வாயிலிலேயே உமதாட்கள் மூலம் பல வார்ணம் கிடைத்து விட்டது. எனக்கினி என்ன குறை?" என்றான். போஜன்

உண்மையை யறிந்து, வேலையாட்களைக் கடிந்து, வித்வானுக் கினிய கூறி, அவனை வியந்து யானை கொடுத்து அனுப்பினன்.

குறிப்பு:—"வாரணம்" என்ற சொல் 'யானை" எனபதையும 'தடை' என்பதையும் குறிக்கும். —ஆயக்கண்ணனார்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(முதல் தொகுதி 362-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

நொந்துழி அன்புடையார் நோனார் எனிற்பெற்றோர்
மைந்தரைத்தண் டித்தலென்னோ? வள்ளுவரே!—முந்தும்
"அறத்திற்கே அன்புசார்(பு)" என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை (௬)

(அ-ம் முதலியன):—நொந்தஉழி-வருந்தும் போது, நோனார்-(கண்டு) சகிக்கமாட்டார்கள், முந்தும்-முதன்மையான, சார்பு-துணை, அறியார்-உண்மை அறியாதவர், மறம்-பாப நீக்கத்தின் பொருட்டு உண்டாகும் கோபம் தண்டனை முதலியன, அஃது-அந்த அன்பு.

தேவருத்திரன் தொட்டால் சிதையவரம் பெற்றான், அம்
மாவரம்தன் னால்மடிந்தான் வள்ளுவரே!—தாவியே
என்(பு)இல் அதனை வெயில் போலக் காயுமே
அன்(பு)இல் அதனை அறம் (௭)

(அ-ம் முதலியன):—சிதைய-(எரிந்து) அழிய, வரம் பெற்றான்-வரம் பெற்ற பஸ்மாசுரன், மா வரம்-சிறந்த வரம், தாவியே-பற்றியே, என்பு இல் அதனை-எலும்பு என்பதில்லாத (புழுக்கள் போன்ற) பிராணிகளை, வெயில்-தீ, காயும்-உக்கிரத்துடன் வருத்தும், அன்பு இல் அதனை-அன்பில்லாத (மிருகத்தன்மையுள்ள) மனிதனை, அறம்-தரும தேவதை.

பஸ்மாசுரன் பஸ்மமான வரலாறு:—பஸ்மாசுரன் என்னும அரக்கன் ஒரு சமயம் பரமனைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தனன். அவனது தவத்திற்கு மெச்சிய கடவுள் அவன்முன் போந்து, "நீ வேண்டுவன கேள். யாதும் தருவேம்" என்ன, அசுரன், "யார் தலையில் யான் கை வைப்பேனோ, அவர், சிரவிற் கைபட்ட மாத்திரத்தில் எரிந்து நீறாக வேண்டு"மென்றான்.

பரம சிவக் கடவுள் 'அங்ஙனமே ஆகுக' என அநுக்ரகிக்க, அம் மூட மூர்க்கன், தன் வரம் பலிக்கும் விந்தையை உடனே கண்டு மகிழக்கருதி, தனக்கு வரமளித்த பரமன் தலையிலேயே கைவைக்க ஆரம்பித்தனன். உடனே ஈசன அவனது நன்றியில் செயலுக்கு அதிசயித்து, அங்கிருந்த ஓர் ஐவேலிக்காயில் மறைந்து நின்றார். மூட்டரக்கன் சிவனை எங்கும் தேடியும அகப்படாமையின் கோபம் மேலிட்டவனாகி உலையா முயற்சியுடன் அவரைத்தேடி அலையலாயினன். இவனது பிடிவாத தீர்மானமறிந்த தேவர்கள் அஞ்சி நடு நடுங்கித் தந்நலம் கருதித் திருமாலைச் சரணபுகுந்து

விழுந்தன கூறினர். திருமால் அவர்கட்கு அபயம் அளித்து, ஓர் மோகினி வடிவெடுத்து அசுரன் முன் நின்றார். அசுரன் சிவனைத் தேடும் முயற்சியை அறவொழித்துக் காமவெறியால் மயங்கி மோகினியைக் கைப்பற்றச் சென்றபோது, மோகினி, அவன் நீராடி நித்யகர்மானுஷ்டானம் முடித்து வந்தபின் அவனுடன் சந்தோஷமாய் இருப்பதாக வாக்களிக்க, அவனும் சென்று நீராடினன், பிறகு, சந்தியாவந்தனம் செய்யும் போது ஆசமனீயம் செய்கையில், பகவானது திருநாமங்களைக் கூறித் தேகத்திலுள்ள பற்பல இடங்களையும் தொட்டுச் சுத்தி செய்யுங்கால் "தாமோதர!" எனக் கூறித் தன்தலையிற் கைவைத்தான். சிரசிற் கை பட்ட மாத்திரத்தில் பற்றி யெரித்து பஸ்மமாயினன் அசுரன்" என்பதே.

மாய்ந்தோர் உயிர்க்கும் மறைபெற்றும் வீரரொடு
மாய்ந்தான் சுயோதனனும் வள்ளுவரே!—ஆய்ந்தக்கால்
அன்(பு) அகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பார்க்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. (அ)

(அ-ம் முதலியன):—மாய்ந்தோர் – இறந்தோர், உயிர்க்கும்–பிழைக்கின்ற, மறை–ரகஸ்ய மந்திரம், சுயோதனன்–துர்யோதனன், அகம்–மனம், வாழ்க்கை–இல்லற வாழ்க்கை, வன்பார்க்கண்–கடின நிலத்தில், வற்றல் மரம் – பட்டுப் போன மரம், தளிர்த்தற்று–தளிர்த்து முளைத்ததைப் போன்றதாகும்.

சுயோதனன் மாய்ந்தோர் உய்யும் மறை பெற்றும் மாய்ந்தது:—பாண்டவர் ஐவரும் கௌரவர் நூற்றுவருடன் தமது தாயபாகத்தைப் பெறக் கருதி, ஸ்ரீ கிருஷ்ணனைத் துணைகொண்டு புரிந்த யுத்தத்தில், 17 தினங்களுக்குள் துரியோதனனது படை அநேகமாய் அழிந்துபட்டன. அவன் 18–ஆவது தினத்தில் ஆதரவேது மற்றவனாகி 'யாது செய்வோம்' என ஏங்கி, தான் முன்பு கற்றறிந்த 'அமிர்த சஞ்சீவி' மந்திரத்தை ஜபிக்கத் திடரென ஒரு மடுவிற் குதித்து மறைந்தான். இம்மந்திர பலத்தால் இறந்த தன் தம்பிமார்களையும் சேனையையும் மீளச் செய்து பாண்டவர்களுடன் போராடி அவர்களைக் கொன்று வெற்றி பெற வேண்டுமென்பதே அவனது நோக்கம். ஆயினும், அன்பின்றியும் துவேஷபுத்தியுடனும் இது செய்யப்பட்டதால், இம் முயற்சிக்கு இடையூறு நேரிட்டது: அவன் மடுவில் ஒளித்த விவரம் வேடர்கள் மூலம் வீமன் அறிந்து, கொடுஞ் சொற்கூறி அவனை வெளியேற்றிக் கொன்றான்" என்பதே.

(இன்னும் வரும்.)

ம. கோ.

சாணக்ய ஸாஹஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

(முதல் தொகுதி 358–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ராக்ஷஸன் உடனே குபீரென்று படுக்கை விட்டெழுந்து, "என்ன! என்ன! நந்தர்கள் ஜப சாலையிலா இருக்கிறார்கள்? ஐயோ! 'நித்திரை சத்துரு' என்ற நீதிமொழி என்னில் நிசமாயிற்றே! ஐயோ! நான் சத்துருக்கள் நாசமுறும்படி செய்த கபடங்களும் தந்திரங்களும், அவர்களுக்கு அநுகூலமாகவும் நந்தர்களின் விநாசத்திற்குக் காரணமாகவும் ஏற்பட்டு விட்டனவே. என்ன செய்வேன்? ஆ! நந்தர்கள் என்ன கதி ஆனார்களோ?" என்று புலம்பிக் கொண்டே ஆயுதபாணியாகக் குதிரையேறி ஜபசாலையை நோக்கிச் சென்றான்.

ஜபசாலை தீப் பற்றியதால் உண்டான பெரும் புகை, பூமி ஆகாயம் முழுதும் சூழ்ந்து செறிந்ததால், சத்துரு சேனைகளைக் காணவாவது, அங்கு நடக்கும் விஷயங்களை அறியவாவது அவனால் முடியவில்லை. நந்தர்களுக்கு அணிந்திருந்த விலை மதிக்க முடியாத ஆபரணங்களைத் தமது குதிரைகளுக்குப் பூட்டியும், அவர்கள் பிடித்திருந்த நன்முத்துக் குடைகளை 'எனக்கு' 'எனக்கு' என்று கிழித்துப் பங்கு போட்டுக் கொண்டும் வரும் சத்துரு சேனைகளைக் கண்டதும், உயிரற்றவன் போல ஆகிப் பின்பு அதி தீவிரமாகச் சென்றான். அப்போது, முன்பு ஸித்தார்த்தகனால் நியமிக்கப்பட்டிருந்தவனும், ராக்ஷஸனது மெய்காவலாளர்க்கு அதிபதியுமான வீரன் அவனை வழிமறித்து நிறுத்தி, "ஸ்வாமி அமாத்தியரே! எனது ஒரு விண்ணப்பத்தைக் கேட்டருள வேண்டும். உலகில் ஸ்வாமி பக்தர்கள் தமது எஜமானர் கண்டு களிக்கும்படி சமயோசிதமாகப் பெருங்காரியங்களை நிர்வகித்துக் கீர்த்தி அடைவது ஸகஜம். இப்பொழுதோ, பிரபுக்களான நந்தர்களின் நிலைமை மாறுபட்டு விட்டது. இனித் தாங்கள் செய்யும் சாகஸ காரியங்களைக் கண்டு புகழவும், பயனுறவும் யார் இருக்கின்றார்கள்? அரசர்களான நந்தர்கள் உயிருடன் இருக்கும் வரையில் அவர்களுக்குச் சத்துருக்களாயிருந்த மன்னர்கள், மந்திரியாக இருக்கும் தங்களுக்கும் சத்துருக்களாக இருக்கலாமே யன்றி, இப்பொழுதும் சத்துருக்கள் ஆவார்களோ? யுத்தத்தில் மடிவது க்ஷத்திரிய தர்மமே அல்லது பிராமண சிரேஷ்டரான தங்களுக்கு இது தர்மம் ஆகுமோ? துவாபர யுகத்தில், சஸ்திர வித்தையிற் பிரசித்தி பெற்றிருந்த துரோ

ணுசாரியரும், அந்த சஸ்திர வித்தையைக் கொண்டே ஜீவித்தும்,
முடிவில், 'அந்தணர்களுக்கு ஆயுதத்தால நற்கதி உண்டாகாது'
என்று அறிந்தல்லவோ, சஸ்திர ஸந்யாசம் செய்து, அந்தணர்க்கு
உரிய தியானத்தாலேயே நற்கதி அடைந்தார். ஆகையால், சேவகத்
தொழில் நீசத் தொழிலே யன்றி உத்தமமான தொழிலாகுமோ?
வீண் ஆயாஸத்தாலும் கோபத்தாலும் பயன் யாது? வெள்ளம்
தலைக்குமேல் போன பின்பு யாரால் என்ன செய்யமுடியும்? தாங்
களேனும் உயிருடன் இருந்தால் விருத்த மஹாராஜாவின் அந்தப்
புர ஸ்திரீகளின் மானத்துக்கும், நந்தர்களது நற்பத்தினிகளின்
பதிவிரதத்திற்கும் மிலேச்சர்களான சத்ருக்களால மானக்குறை
வேதும் நேரிடாமற் காப்பாற்றலாம். இனி நீங்கள் செய்ய வேண்
டிய 'ஸ்வாமிகாரியம்' என்பது ஒன்று இருக்குமாயின், அது
இதுவே ஆகும்.'' என்று சமயோசிதமாகச் சில கூறி மனதைக்
கலைத்தான். ராக்ஷஸனும் பலவாறு யோசித்து, இன்னதுதான் செய்
கிறதென்று தோன்றாமல், மெய்மறந்து, அவ்விடத்திலேயே, அசை
யாது, மரம்போல நின்று விட்டான்.

ராக்ஷஸன் செய்தி இவ்வாறாக, சந்திரகுப்தன் சேகரன் முதலி
யோரால் தாக்குண்ட நந்தர்கள், அதி உக்கிரங் கொண்டு, வீச்சு
க்குப் பத்தெட்டுத் தலையாக நிலத்தில் வீழ்த்திக் கடும்போர் புரிந்
ததில், சத்ருசைனியத்தில முக்காற் பங்கு மாண்டது. பிறகு நிகழ்
ந்த யுத்தத்தில ஜேஷ்ட நந்தன் சபரவர்மனது சிரத்தைச் சேதித்
துக் கீழ் வீழ்த்தினான். இதுகண்ட சந்திரகுப்தன் வியாக்ரம போல்
ஆக்ரஹங்கொண்டு கிளம்பி, ஜேஷ்ட நந்தனது வலக்கையை வெட்டி
வீழ்த்தித் தன் கைபீட்டியை அவன் மார்பில் அழுத்தினான். அழுத்
தவே, உயிர் துறந்தான் ஜேஷ்ட நந்தன். உடனே சேகரன் உப
நந்தன் தலையை வெட்டி வீழ்த்தினான். கனிஷ்டநந்தனைச் சித்திர
வர்மன் ஸம்ஹரித்து விட்டான். விநந்தன் காம்போஜனைக் கொல்
லவும் சித்திரவர்மன் விசந்தனைக் கொன்றான் ஸிந்துஷேணன் தனது
கைவேலால் ஸம்ஹரித்தான் லோக நந்தனை. பாரஸீகபதி குரு
நந்தனையும் புஷ்கராக்ஷன். அனுநந்தனையும் கொன்றதும், சாணக்
யன் சேகரனை அழைத்து, "இவர்களுடன் எவ்வளவு காலம் யுத்தம்
செய்வது? மீதமுள்ள நந்தாதமர் மூவர்காலிலும் கயிறு கட்டிக் 'கர
கர' என்று இழுத்துக் கொல்லுக'' என்று ஆக்ஞாபித்தான்.
சாணக்யனது கட்டளைப்படியே அம்மூன்று பேர்களையும் கட்டி
உருட்டி இழுத்தனர்.

பிறகு சாணக்யன் சேகரனை நோக்கி ''இத் துராத்மாக்கள் ஒன்
பதின்மர் தலைகளையும் கொண்டு வந்து நமக்குக் காண்பி'' என்று
உத்தரவிட்டுச் சந்திரகுப்தனுடன் தனது இருப்பிடம் திரும்பினான்.
தலைகள் ஒன்பதும கொண்டுவரப்பட்ட காலையில் சேனைகள் சிதறி

ஓடின. ஒன்றும் செய்யத் தோன்றாது நடு வழியில் நின்றுகொண்டிருந்த ராக்ஷஸன், அவற்றைக் கண்டதும, "ஆ! ஆ! நந்தர்கள் இறந்து விட்டார்கள் என்பதில் ஐயமே இல்லை. அவர்கள் உயிருடன் இருந்தால் சத்துரு சைன்யங்கள் இவ்வளவு கோலாஹலத்துடன் தமது பாளையம செல்லுமா?" என்று ஏங்கி, "மௌர்யவதம் அன்றோ நந்தர்களை இவ்வண்ணம நாசப்படுத்தியது!" என்று பெருமூச்செறிந்து விசனப்பட்டுக் கொண்டே தனது குதிரையைத் திருப்பிப் பட்டண வாயில் அருகில் வந்து, கோட்டை வாயிலைப் பூட்டவும், சத்துருக்களை உள்ளே விடாது தடுக்கவும், நகரைக் காக்கவும் அங்குள்ள சைனியங்களுக்கு உத்தரவிட்டுத் தன வீட்டிற்கு வந்தான்.

நந்தர்களின் சிரங்கள் சேகரனுடைய உத்தரவுப் பிரகாரமே சாணக்யன் முன் வைக்கப்பட்டன. கஸ்தூரி திலகங்களாலும், கழுத்திற் பூசிய சந்தனப் பூச்சினாலும், இரத்தின மயமான கிரீடங்களாலும், விளங்கிக் கொண்டும், உதடுகளைக் கடித்துக்கொண்டும், அரைக் கண்ணை மூடிக்கொண்டு நித்திரை புரிவது போலவும இருந்த அவ்வொன்பது சிரங்களையும் சாணக்யன பார்த்து, "இவர்களுடைய தகாதசெய்கைகளே இவர்களுக்கு இவ்வித துர்த்திசையை உண்டு பண்ணின: ஆயினும துணிந்து முன்வைத்த காலைப் பின் வைக்காமல் யுத்தம் செய்ததால் இவர்களுக்கு நற்கதியே யுண்டு" என்று மனப்பூர்வமாக உரைத்துச் சந்திரகுப்தனை நோக்கி, "குழந்தாய்! இந் நந்தர்களின் சிரோ பூஷணங்களில் உள்ள மகா ரதநங்களைப் பார்த்து, உனது பிதாவையும் சகோதரர்களையும் சத்துருக்கள் கொன்றதனா லுண்டான துக்கத்தை விட்டு விடு. துவேஷமென்பது சத்துருக்களது மரணபரியந்தமே ஆகும். கங்கா நதி சென்று ஸ்நானம் செய்து, யுத்தத்தில் மடிந்த இந் நந்தர்கள் உனக்கு ஞாதிகள் ஆகையால் அவர்கள் நற்கதி யடையும்படி தர்ப்பணம் முதலியன செய். இன்றே எனது சாகஸம நிறைவேறியது. என் சபதமும் ஸத்திய மாயிற்று" என்றான்.

இது கேட்டுச் சந்திரகுப்தன் கண்ணீர் ஆறாகப் பெருகக் கரைந்து கரைந்து அழுது, "ஐயோ! என் தந்தையையும் சகோதரர்களையும் அநியாயமாக இவர்கள் கொன்றதால அன்றோ இந்நாசம் இவர்கட்கு உற்றது! என்பாட்டனாராகிய ஸர்வார்த்தஸித்தியின் நல் வம்சம் இவ்விதம் வீணாய்விட்டதே! இந்த நூற்றொன்பது பேர்களுக்கும் தர்ப்பணம செய்து, எள்ளும தண்ணீரும இறைக்கும்படி என் ஒருவன் தலையில் எழுதியிருக்கிறதே! ஐயோ! இவர்கள் செய்த அநியாயம் அப்பொழுது என்னால் பொறுக்க முடியாததாக இருந்தமையாலேயே தங்களைச் சரண் அடைந்தேன் இவர்களையும் கொன்றேன். என்னை இனிக் 'குலத்துரோகி' என்று கண்டோர்

யாவரும் தூற்றுவார்களே! 'உறவினரைக் கொன்ற மாபாவி' என்ற அபவாதத்திற் குட்பட்டு உயிர் வாழ என்மனம் ஒப்பவில்லை. நான் நற்கதி அடையும்படி தேவரீர் ஆசிர்வதிக்க வேண்டும்'' என்று சாணக்யனது பாதங்களில் விழுந்து புரண்டு அழுதான்.

சந்திரகுப்தனது பரிதாப நிலையைக் கண்டு சாணக்யன், ஐயா!, சந்திரகுப்த! ஏன் வீணில் வருந்துகிறாய்? உனக்கு அணுவளவும் பாபம் ஏற்படாது. க்ஷத்திரிய வம்சத்தில் உதித்தவர்களுக்கு இது சகஜமான காரியமே ஆகும். முன்பு ஸ்ரீ ராமனைச் சரண் அடைந்து, தமையனாகிய ராவணனைக் கொன்று, லங்கையை ஆண்டுவந்த விபீஷணனுக்கும், ராமனை வணங்கி உடன் பிறந்தான் ஆன வாலியைக் கொன்ற சுக்ரீவனுக்கும், கிருஷ்ணனது ஸகாயத்தைக் கொண்டு கௌரவர்களைக் கொன்று அரசாட்சி புரிந்த பாண்டவர்களுக்கும் பாபம் உண்டாயிற்றோ? அவர்கள் எல்லோரும் கீர்த்திமான்களாக இம்மையில் விளங்கிப் பரலோகத்திலும் நற்கதி அடையும்படி தான தருமங்கள் முதலியன செய்து, செங்கோல் பிறழாது ஆட்சி புரியவில்லையோ? நீ இங்ஙனம் கவலைப்படுவது அழகன்றே! இக் காரியங்கள் எல்லாம் மனித யத்தனத்தினாலா நடக்கின்றன? 'ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே?' செய்பவனும், செய்விப்போனும் ஈசுவரனே அன்றோ? இதுவே உண்மையாதலின், "நான் செய்தேன்'' என்ற அகம் பாவத்தை விட்டுவிட்டு, க்ஷத்திரிய குல முறைப்படி இவர்களுக்குத் திலோதகம் கொடு'' என்று சமாதானம் செய்து, கங்காநதி தீரம் செல்லுமாறு அவனை அனுப்பினான்

பிறகு சாணக்யன் சேகரனை அழைத்து, ஐயா! சேனாபதியே! இந் நந்தர்களின் உடற் குறைகளை, அரச விதமாகத் தோன்றியவர்களைக் கொண்டு, கங்கை நீரிற் குளிப்பாட்டி, ஜபசாலையில் இருக்கும் அக்கினி குண்டத்திற் போடும்படி செய். நந்தரது பத்தினிமார்கள் அபேக்ஷித்தால் இந்தத் தலைகளைத் தைலக் கொப்பரையிலிட்டு அனுப்பிவிடு. சேனைமுழுவதும் சத்துரு ஜயத்திற்காக உத்ஸவம் கொண்டாடட்டும்'' என்று கூறி அனுப்பினான்.

சாணக்யனது கட்டளைப்படியே, சேகரன், நந்தர்களது தேகத்தை அக்கினி குண்டத்திற் போட்டு, தலைகளைக் கொப்பரையில் இடும்படி செய்து, உத்ஸவம் கொண்டாடும்படி சேனைகளுக்கு உத்தரவிட்டான். உத்ஸாகம் அடைந்த வீரர்களது சிங்க நாதங்களும், ஜயபேரிகைகளின் பெருமுழக்கும், பீரங்கி வெடிகளின் சப்தமும் எங்கும் எதிரொலி ஒலித்தன. பர்வதேசனது சேனைஜனங்கள் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டும், தட்டிக் கொடுத்தும், 'நீ சூரன்' 'நீதான் சூரன்' என்று ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொண்

டாடியும், நடன உத்ஸவங்களைக் கண்டு களித்தும், சர்க்கரை வழங்கப் பெற்றும், வாசனைப் பூச்சுக்களாலும் மணமலர் மாலிகைகளாலும் தம்மை அலங்கரித்துக் கொண்டும், கள்ளாட்டயர்ந்து களிகூர்ந்தனர்

இவை யாவும் நிகழும் சமயத்தில் சாணக்யன் கங்கா நதி சென்று நீராடி, அவிழ்ந்து புரளும் தனது சிகையைத் தட்டி முடிந்து கொண்டு, சந்தியா வந்தனாதி நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்து விட்டு, சந்திரகுப்தனையும் அழைத்துக்கொண்டு, தனது ஸாகஸம் நிறைவேறியதற்காக ஸந்தோஷப்பட்டுக் கொண்டே தன் விடுதி வந்து சேர்ந்தான்.

முதற்பாகச் சுருக்கம் முற்றிற்று.

வி. பாலம்மாள்.

கமலாவதி.

அங்கம்—3.

காட்சி—5.

இடம்—மாளவநாட்டை அடுத்த ஓர் வனம். காலம்.—பகல்.

ஸ்ரீதரன். (களைப்புடன் ஓர்மரத்தடியில்படுத்துத் தனக்குள்.) ஹா! கதிரவன் கொடுமையை என்னென்றுரைப்பேன்! வழிதவறி இக் கானகத்தில் நான் இப்படி அலையும்படி நேரிட்டதைப் பற்றிக் கூட எனக்கு அவ்வளவு வருத்தமில்லை. எனது சிற்றன்னை என் மீது இவ்வீண்பழியைச் சுமத்தியது தான் சகிக்கக் கூடாததாக இருக்கின்றது. என்தந்தை எனக்குக் கட்டளையிட் டெழுதிய நிருபத்தில், இப்பழியைப்பற்றி ஒன்றும் எழுதவில்லை. இவ்வளவுக்கும் எனது சிற்றன்னையின் துர்ப்போதனையே காரணம் என்பதை ஜயகேசரி எனக்குத் தெரிவித்து விட்டான். ஹா! அவனுக்கேன் என் மீது வெறுப்பு? அப்பா! என்னகஷ்டம்! என் கமலாவதியையும் இனிக் காண்பதிற் கில்லையே!. நான்கேள்விப்பட்டது உண்மையா

யின அவள் எந்த வஞ்சகன் கையிற் சிக்கினளோ?(சற்றுத் தாமதித்து) இருக்கட்டும் — என்ன செய்யலாம்? விதியை வெல்ல எவரால் முடியும்? எப்படிப்பட்ட கஷ்டம் வந்த போதிலும், நான் அனுபவித்தே தீரவேண்டும் (பெருமூச் சுடன்) அசாத்திய அலைச்சலால் தேகம நோகின்றது.— களைப்புமேலீட்டால் நித்திரை வருகின்றது.— ஆம், இப் படிப் படுத்துச் சற்று நித்திரை செய்கின்றேன்.

[படுக்கிறான். சற்றுநேரத்திற் கெல் லாம் ஜயகேசரி பிரவேசிக்கிறான்.]

ஜய. (தனக்குள்) ஹா! பாபி கொரீரசேன! மஹாராஜாவை நானு குத்தினவன்? முன்பு, உன்மீது எனக்குக் கொஞ்சம் சந்தேகம் இருந்தது. இப்பொழுது அச் சந்தேகம் நிச்சயமா யிற்று என்காதலி குணமாலிகையையும், எப்பொழுதும் உன் மீது சந்தேகத்துடனேயே இருந்து வருகின்றாள். கொ ரீரசேன! உனக்குக் 'காலம் சமீபித்தது விட்ட' தென்பதை அறிவாய்.(களைப்புடன்) நான் இக் கானகத்தில் வழிதப்பித் திண்டாடியதைப் போல் எங்கும திண்டாடியதில்லை. சற்று இளைப்பாறிக் கொள்வோமென்றால், தக்க இடம் சமீபத்தில் காணேனே! என் கால்கள் நோகின்றன. நான்நாட்டைவிட் டுப் புறப்பட்டு நாட்கள் பலவாகியும்,ஸ்ரீதரர் தென்படவில் லேயே!

[ஓர்திசையைக் காண்பித்து]

அதோ ஒருமரம் தெரிகின்றது! அங்கு சென்று சற்று இளை ப்பாறிக் கொள்ளுகின்றேன்.

[அப்படியே செய்கிறான்.]

யாரோ, அம்மரத்தினடியில் படுத்திருப்பது போலிருக் கின்றதே!

[சமீபத்திற் சென்று திடுக்கிட்டு]

ஸ்ரீதரர் போலன்றோ இருக்கின்றது. ஆம், சந்தேகமில்லை. ஸ்ரீதரர் தான். என்ன ஆச்சரியம் இவர் இங்கு எங்கு வந் தார்? அயர்ந்த நித்திரை போலிருக்கின்றது!

[ஸ்ரீதரன் நித்திரை தெளிந்தெழுந் திருக்கின்றான்.]

ஸ்ரீ. (திடுக்கிட்டு) யாரது?—ஜயகேசரியா?—நீ இங்கு எங்கு வந்தாய்? தந்தையி னருகிலேயே எப்பொழுதும், இருக்க வேண்டுமென்று நான் உனக்குக் கட்டளையிட்டிருக்தேனே!

ஜய (விசனததுடன்) அரசே! ஐயோ! என்னவென்று சொல்லுவேன்! சொல்லுவதற்கு நாவெழ மாட்டேனென்கின்றது.

ஸ்ரீ. (ஆவலுடன்) ஜயகேசரி! வீரபுருஷனாகிய நீ கூடக் கேவலம் பெண்பிள்ளை போல் அழ என்ன நேரிட்டு விட்டது? என் தநதை முதலானவர்கள் சௌக்கியந்தானா?

ஜய. (விசனத்துடன்) தங்கள் தநதையை—

[அழுகிறான்.]

ஸ்ரீ உம்—என் தநதைக்கென்ன? ஸ்! அழாதே நடந்த விஷயமென்ன?

ஜய. தங்கள் தந்தையைக் குத்திவிட்டு, என் மீது இப்பழியைச் சுமத்தி, என்னை நாட்டை விட்டகலும்படியும் செய்தான்.

ஸ்ரீ [விசனத்துடனும், கோபத்துடனும்.]

என் தந்தையையா—குத்திவிட்டானா?—ஹா! ஹா! அப்பாதகன் யார்.?

ஜய. தயவு செய்து 'அவன் இன்னான்' எனறு கேளாதிருக்குமாறு தங்களை வேண்டுகின்றேன். பழிவாங்கிய பிறகே, அவன் இன்னானெனத் தங்களுக்குத் தெரிவிக்கிற தென்று தீர்மானித்திருக்கின்றேன். நிச்சயம் அறிந்த பிறகே, அவனைமாய்த்துத் தங்களுக்கு அறிவிப்பேன்.

ஸ்ரீ சரி, உனதிஷ்டம்.

ஜய. அரசே! மற்றுமோர்விஷயம். தங்கள் காதலியாகிய கமலாவதியைக் கபடமாக அபகரித்தவனும், தங்கள் மீது இப்பெரும்பழியைச் சுமத்தும்படி தங்கள் சிற்றன்னையைத் தூண்டினவனும் அவனென்றே கேள்விப்படுகின்றேன்.

ஸ்ரீ. (கோபத்துடன்) அப்படியா! அவன் யார்?

ஜய அரசே! அவன் இன்னுமொன்று மாத்திரம் தாங்கள் இப்பொழுது கேட்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேனே! எல்லாம் பிறகு தெரியாமலா போகப் போகின்றது? உண்மையை அறிய ஒருபாயம் எனக்குப்புலப் படுகின்றது. அப்படிச் செய்தால், உண்மை எப்படியும் வெளிப் பட்டு விடும்.

ஸ்ரீ. சரி, நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்கின்றாய்? இதைக்கண்டு பிடித்தே தீரவேண்டும்.

ஜய. தங்களை நான் எங்கு அழைத்த போதிலும், என்னுடன் தயவு செய்து வரவேண்டும். இதுவே தாங்கள் செய்ய வேண்டிய காரியம்.

ஸ்ரீ. ஆஹா! இது பிரமாதமா?

ஜய. அப்படியானால், உடனே மாளவ நாட்டுக்குத் திரும்புங்கள். இனி தாமதிக்கத் தாமதிக்க, நமக்கு ஆபத்தே மேன் மேலும் பெருகும்.

[இருவரும் போகிறார்கள்.]

காட்சி முடிகின்றது.

(இன்னும் வரும்.)

K. வேங்கடராமையர்.

கள்வனும் கற்றறி மூடனும்.

உலகா நுபவம் ஒருபெரும் பொருளென
நிலையா(க) உணரா நீர்மையன், நூலே
கற்றவோர் புலவன், குற்றமில் குணத்தன்,
உற்றதன் மனையில் ஓர்நாள் இரவில்
முன்கதை யிரண்டும் முடித லின்றித்
தன்னந் தனியனாய்த் தன்மனத் தேதோ
உன்னின னாகி ஒருவிடை அடையா(து)
அனன் கினைப் போ(டு) அமர்ந்திடும் காலை,

பொன்னொளி ஒருவன் உட் புகுந்ததைக் கண்டு,
"என்னுடை யனுமதி யின்றிஎன் வீட்டினுள்
இன்னே நுழைந்தவன் யாவனோ?" என்ன
அருகினில் வந்த ஒருவனைக் கேட்க,
'திருடனே' என்னத் தெரிந்தும் நண்பன்
வெருவிய மனத்தொடும விதிர்த்தமெய் யொடும்எதோ
உரைதடு மாறி உரைத்தனன். அன்னோன்
சொல்லிய வதனிற் "சோ" எனும் ஒலியே
மெல்ல அவன்செவி விழுந்தது, வீழ்தலும்,
சிந்தைவே றெதிலும் செலுத்தா தவனாய்,
அந்தச் 'சோ' இயல் ஆய்ந்திட லாயினன்,
வழுத்தினன் 'சோ' என.—"மற்றி(து) உயிர் மெய்
எழுத்தே யாகும்—எதற் கிவண் வரும
திறம்? அத னல்இது தேரின் எழுத்திலை.
உறஇனி மறுபொருள் உற்று நோக்குவம்:
"துயர்" என ஒருபொருள் சொலவிட லாமெனில்,
உயிருள மானிடர் உருஅதற் கிலையே!
'அரண்' என ஒருபொருள் அறையலாம்; அதனை
உரைசெயில், வள்ளுவர் உரைத்தனர் அன்றே
"மணிநீரு மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்" எனா. காணில்,
"மணிநீ ரோ?" இலை; 'மண்' ணும் அஃதிலை.
அல்லது 'மலை'யோ? 'அணிநிழற் காடோ?'
இல்லை: இவைநம் இல்லினுட் புகாவால்.
"உமை" என ஒருபொருள் உரைத்திட லாம்—உமை
நமைஅடை தாயாம் நாடிலம் தவமே.
அன்றியும் பெண்உரு ஆகுமால் அவ்வுமை.
'எதிதற் கின்னும் இருந்திடும் பொருள்கள்'
என ஆய்வம்.—சோ இகல்வா ணாசுரன்
றனது நகர்' எனச் சாற்றிடக் கேட்டுளம்.
"நகரமும் மனையினுள் நகர்ந்திடுமோ?" எனப்
புகலப் புகுமுன் புந்தியும் சித்தமும

கலகல எனநகை காட்டிச் சிரிக்குமால்.
இலை, இலை. வியப்பே இஃ(து) அளிக்கிறதால்,
'வியப்புச் சொல்'எனல் மிகஅமை வுடைத்தே.
பயன்என் நம்முடைப் படிப்பினால்?'' என்ன
மயர்வுறும் எல்லையில், வந்தனன் அவனது
உயர்பொருள் கவர்ந்த உத்தமன் வெளியே.
அயர்வுறும் சிந்தையன், அவ்வமயத்தும்
''யார்இவன்'' என்ன இசைத்தலும், நண்பன்;
'சோரன்' எனவே சொற்றனன் மெதுவாய்.
இதில் 'ரன்' என்பதே இவன்செவி யுற்றது.
அதுகேட்(டு) இறும்பூ(து) அடைந்தனன் புலவன்.
சிந்தனை யாவும் செப்பிய 'சோ' விற்(கு)
எந்தப பொருளென எண்ணுறும் மனத்தற்(கு)
ஒருசந் தேகம் உணர்ந்து தெளியுமுன்,
ஒருசந்தேகம உறற(து) என் செய்வன்?
பின்வரு மாறு பெரிதும் எண்ணினன்:
'ரன்'எனும் அன்னவன் நாமமே போல
இன்னநாள் வரையாம ஏதும் கேட்டிலம்
இன்னும் 'ரன்'என இயம்பிய மொழியில்
'ர' எனும் எழுத்து நாடின் 'வல்லின்மோ
இடையின மோ'யாம் ஏதென அறிகிலம்.
விடைபெறு வதுவோ மெத்தவும் வருத்தம்.
'பன்னி ருயிரும்' எனப்பவ ணந்தி
சொன்ன சூத்திரம் தோம்அற ஆய்வமேல்,
அவ்இரு எழுத்தும் அமையுமோ மொழிமுன்?
பின்னை இதன்பொருள் என்னை? ஆய்குவம்.
இடையினம் வல்லினம் இவை ஒழிந்திடுக.
கடைஎழுத் தேனும் காட்டுமோ ஒருபொருள்
எனில், அதும் கடையெழுத்(து)எ(து) அதற்(கு) ஒருபொருள்?
தனித்தும் பொருளில சாற்றுவ தென்னை?
'மூன்றெழுத் துள்ள ஓர் மொழியது வாகில்,
ஒன்றனப் பொருளெனும் ஈயுமோ' என்று

பார்ப்பம் இனி" எனப் பகர்ந்தனனாகித்
தீர்க்க யோசனைத் திறத்தினன், மேலே
செப்பினன் 'சோரன்' என்(று)' அப்புறமஜ்ஜய
அப்பப் பா!பொருள் அறிந்தனம்" என்றனன்
'சோரன்'என் னுருபொருள் தோன்றலே, திகைத்து,
ஆ! ஆ!! சோரனோ அடைந்தனன் மனையில்?
ஏ! ஏ! என்மதி இருந்தவா றென்னே!
நன்(று)அக் கள்வனை நானோ விடுபவன்?
எங்குசென் றாலும் இப்பொழு தேபோய்
அங்கவன் தனைபிடித்(து) அடையா(து) ஒழிவனோ?
எனத்திட நெஞ்சுடன் எழுந்(து)அப் புலவன்
கள்வனைத்தேடிக் காலெலாம் கடுக்க
நாற்றிசை யும்போய் நாவறள் வுற்று,
'மேற்செயும் காரியம் இல்'என மீண்டுதான்
இழந்தவைக் காத்துயர் உழந்தவ னாகி
இரங்கிக் கூறினன: "என்னே எனமதி!
புத்தகப் படிப்பே போதுமென் றிருத்தல
மெத்தவும் பிழைஆம். அத்துடன் உலக
அநுபவ மும்மிக அவசியம்" எனவே.

A. R. சீனிவாச முதலியார்.
ஆனைமலை.

விடுகதை வினா.

அக்கரம தொனபதில் அமைகைஞம் படைகாங்கும்
அவன்பேரின் அபிதான மாம
ஆதிரான்(கு) ஈறு:நாள்; மூன் றுநான(கு) ஈறு: அவற்கு
அநதமாம; ஆறும ஒன்றும.
மிக்கவன் சோரமுடன் ஆயர்மனை உண்டதாம்;
வேழம்: ஆறு ஐந்து முதலும்;
மேனுத் தமமாறு மூன்(று) ஈறு: கதவமாம்.
மேலும் மூன்(று) ஐந்து முதலும:

மக்களில் வாள்; ஆறும் இரண்டு: மாம்: மூன்று ஆறு
மருவு நான்கு ஈறு: முகமாம்;
மதிமகன் பெயர்: ஏழொ(டு) ஐந்து ஆதி அக்கரம்;
வழுத்தும இருமூன்று நாலுகு ஈ(று):
இக்குமொழி யார்உருப் பினில்ஒன்று; பின்னரும்,
இயம்பிடும பெயரும உளவால்.
இப்பதியை எப்பதி எனக்கண்டு மேலோர்
இசைத்தருள வேண்டினேனே.

அபிதானம்–பெயர், ஆதி–முதல் எழுத்து, மிகுந்து–மிகுதியாக, வேழம்–யானை, சத்தமம்–ஏழாம் எழுத்து, இக்குமொழியார்–கரும்பு போன்ற இனியவார்த்தையுடைய பெண்கள்.

சு. நல்லசிவன் பிள்ளை.
மதுரை.

குசேலர் சரித்திரம்.

நெடிய கடல்சூழ்ந்த இப்பூமண்டலத்திலுள்ள நகரங்களனைத்தினுஞ் சிறந்ததும், மாடமாளிகை கூடகோபுரங்கள் நிறைந்ததும், அளவற்ற பெரியோர்களுக்கு உறைவிடமாயுள்ளதுமான உத்தரமதுரைக் கருகில், அவந்தி யென்னும் பெயருள்ள ஓர் நகரமுண்டு. நீர்வளம் நிலவள முதலிய பல்வகை வளங்களும் பொருந்தி விளங்காநின்ற இந்நகருக்கு அணித்தாகச் சிங்கம் புலி யானை முதலியன வாழும் பெருங்கானக மொன்றுளது. இக் கானிலுள்ளதோர் பெரியமலையின் கொடுமுடியின் நடுவில் அரிய வேதகோஷங்களும் யாகங்களிற் கூறும் மந்திர வோசையும் கடலொலிபோல இடைவிடாது முழங்க, முனிவர்களும் பிராமணர்களும் நெருங்கி வாசஞ்செய்து கொண்டிருந்தனர்.

அவ்விடத்தில் முனிகுல சிரேஷ்டரும் பிரமஞானியும் விஷயங்களில் மகா விரகதரும் சாந்தகுணசீலரும் ஸ்ரீமந் நாராயணனது திருவடிக்கமலங்கள் அன்றி மற்றொன்றினையும் மனத்திற் சிந்தியாதவருமான சுதாமா என்னு மியற்பெயர் கொண்ட குசேல ரென்று சொல்லப்பட்ட பிராமணோத்தமர் ஒருவர் இருந்தார். பற்பல கிழிந்த ஆடைகளை ஒன்றோ டொன்றாகச் சேர்த்து இணைத்து மூட்டிய கந்தையையே தமக்குரிய கல்லாடையாக உடுத்த காரணத்தினால், கண்டோர் யாவரும் இம் முனிபுங்கவரைக் குசேலர் என்று பெயரிட்டழைத்தனர். இவர் இளமையில் சதுர்

வேத பாரங்கதரான் பிராமண சிரேஷ்டராகிய சாந்தீப முனிவரைக் குருவாக அடைந்து, அவரிடத்தில் ஸ்ரீகண்ணபிரானோடு வேதம் உபநிஷத முதலிய சகல கலைகளையும் ஓதிப் பிரமசரிய நிலையிலிருந்து குருகுல வாசஞ் செய்து கொண்டு வந்தார். இக்குசேலர் தன்னுயிர்போல் மன்னுயிரனைத்தையும் பாவித்து, எள்ளளவேனும் தீமை செய்தலைக் கனவினும் கருதாத காருண்ய சீலராய்,

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."

என்றபடி வாய்மையே நோன்பெனக் கொண்டவராய், தவத்திற் கின்றியமையாக் குணங்களாகிய அடக்கம் பொறுமை கருணை நன்பு அழுக்காறின்மை அவாவின்மை முதலியன வுடையராய், பரிசுத்தர்கட்குள்ளும் பரிசுத்தராயிருந்து நாட்கழித்து வந்தார். ஆசையென்னும் கடலைக்கடந்த மனத்தராய்த் திருமாலின் திருவடித்தாமரைகளை எக்காலத்தும் சிந்தித்துக்கொண்டிருக்கும் குசேலமுனிவர், தமது தவவொழுக்கத்திற்கு உதவி செய்ய நியித்தம் களவகயில்லாத குலத்தினில் தோன்றினவளாயும் கொண்டான் குறிப்பறிந் தொழுகும் குணத்தினை யுடையவளாயும், சத்தியமென்னும் விரதம் பூண்டவளாயும், கற்பில் அருந்ததி போன்றவளாயும், பொறுமையிற் பூதேவியை வென்றவளாயும் இருந்த ஓர் பெண்ணை வேதவிதிப்படி மணம்புரிந்தனர். இவ்விருவரும், வந்த அதிதிகளை உண்பித்து, இல்லறநெறிவழாது நடந்துவருகையில், இவர்கட்கு இருபத்தேழு புத்திரர்கள் ஜனித்தார்கள். அக்காலையில் கொடிய வற்றுளெல்லாம் மிகக் கொடியதாகிய வறுமை நோய் மேவிட்டது. ஆயினும்,

"பல்லெலாந் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திறகூட்டிச
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித துணைககரம விரித்துநீட்டி
மல்லெலாம் அகலவோட்டி மானமென் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ இழிவிழி வெந்த ஞான்றும்"

என, வீடுகள் தோறுஞ்சென்று இரப்பதை இகழ்ச்சியென நீக்கி, அஹிம்ஸையென்ற விரதமபூண்டவராய், வயல்களிறசென்று நீவரப் புல்லினது தானியத்தை சுகத்தாற்கிள்ளி யெடுத்துவந்து தமது பத்தினிகரத்திற் கொடுப்பார். அக்கற்புடையமாது அதனை இருகைகளினாலும் பெற்றுக்கொண்டு, குத்திப் பாகஞ் செய்து அதிதிக்கு ஓர்பாகம் வைத்து மீதத்தைத் தன் கணவனுக்கும் மைந்தர்களுக்கு மிட்டுப் பாத்திர மலம்பின ஜலத்தைத் தான் புசிப்பாள். இவ் வண்ணம் குசேலர் உலக விஷயத்திற் பற்றற்றவராய், மந்திரங்களாலும் வேதங்களாலும் எட்ட வொண்ணுத் திருமாலின் பாதார விந்தங்களை அகோராத்திரமும் தியானஞ்செய்து, அதனால் அகக

களிப்புடைந்து வாழ்ந்து வந்தனர். இவர் மனைவியோ தனது 27-புதல்வர்க்கும் பசிதீர உண்பித்தற் கியலாமல், "கொடிது கொடிது வறுமை கொ டி தென" அவர்கள் படுந்துயரை நோக்கி மனமெலிவாள். ஒரு பிள்ளைக்கு அன்னம் அளித்திடும் போது மற்றொரு பிள்ளை கைநீட்டும். ஒரு குழந்தை விம்மியழும். ஒரே காலத்தில் இரண்டு குழந்தைகளுங் கையை நீட்டிக் கொண்டு மேல்விழும். மற்றொரு குழந்தை கண்பிசைச் தழா நிற்கும். மற்றொன்று பூமியில் விழுந்து புரண்டழும். ஓர் குழந்தை, "ஐயோ என் வயிற்றி லெழுந்த பசி அடங்கவில்லையே! என்று கதறும். ஒரு குழந்தை ஆவலுடன் உண்ணப்போம் போது மற்றொரு குழந்தை கஞ்சியை விரைந் திழுக்கக் கீழே சிந்திய கஞ்சியை வேறொரு குழந்தை நக்கும். இக்குழந்தைகளின் துன்பத்தை எங்ஙனஞ் சகிப்பாள்!

இவ்வண்ணம் வருந்துகின்ற புதல்வர்களை நோக்கி, அந்நற்றாய் "நான் முன்செய்த பழவினையின் பயனோ?" என மனநொந்து தன் குழந்தைகளை யிருகரங்களாலும் வாரித்தழுவி உச்சி முகந்து மார்புடன் அணைத்துச் சீராட்டி முத்தமிட்டு இன்மொழிகள்கூறி,அவர்கள் வருத்தத்தை யாற்றுவாள். அயல் வீட்டிலுள்ள சிறுவனொருவன் "இன்று உன் வீட்டில் கறி யென்ன சமைத்தாக"வென்று கேட்க, 'கறி' யென்ற சொல்லின் பொருள் இன்னதென் றுணராமல் தன் தாயிடம் ஓடிவந்து கண்களினின்றும் தாரைதாரையாகக் கண்ணீர் சிந்த, "அன்னாய்! அது எச் சுவையுடையது? அதைச் சமைத்து எங்களுக்குக் கொடு" என்று சொல்லுங் குழந்தைக்கு வேறு வார்த்தைகள் கூறி அதனை மறக்கச் செய்வாள். அண்டை வீட்டுச் சிறுவர்கள் பட்சணந் தின்பதைப் பார்த்துத் தன் தாயிடம் ஓடிவந்து, "இன்னான் இன்ன தின்றான்; என்வாய் ஊறுதலால் இந்த க்ஷணமே அதைச் செய்துகொடு" வென்று தாயின் மடியைப் பிடித்திழுத்துக் கண்ணீர் சொரியுஞ் சிறு குழந்தையை எடுத்து மார்புறத் தழுவி மனம் வருந்துவாள். அயல் வீட்டுச் சிறுவர் அணிந்திருக்கிற மோதிரம் குண்டலம் கட்டி முதலான ஆபரணங்களைப் பார்த்துப் பொறாது, "தாயே இவ் வாபரணங்களை எனக் கிடாதிருக்கும் காரணம் யாது? இக்ஷணமே அவைகளைத் தேடி யெடுத்து எனக்குப் போடு"என்று சொல்லுங் குழந்தையை,வாங்கின கடனைக் கொடுக்க வழியில்லாதான் கடன் தந்தோன் கேட்கும்போது"நாளைக்கு நாளைக்கு" என்று சொல்வது போல, 'நாளைக்கு நாளைக்கு' என்று சொல்லிச் சமாதானப் படுத்துவாள். இச்சிறுவர்கட்கு மரவுரியே யன்றி வேறு ஆடையில்லை. அன்னப்பால் சிறிதே யன்றி வேறு பாலில்லை. அவர்கட்குப் பசி தீர்க்க பாடுமில்லை. கண்ணால் நோக்குதற்கரிய வறுமையைக் கண்ட குசேலர் "மரம் வைத்தவன் தண்ணீர் விடுவான்" என்ற நியாயத்தைக் கடைப்பிடித்து மனம் வருந்தவில்லை. இதைக் கண்ட அவருடைய

மனைவி சற்றும் முகங்கோணாது தன் கணவன்பால் வைத்த அன்பினில் எள்ளளவேனுங் குறையாதவளாயிருந்தாள். இவ்வாறு தரித்திரமென்ற பெருங்கடலுள் மூழ்கியும் நற்குண நற்செய்கைகள் குன்றாமல் தன் கணவராகிய குசேலரிடத்துச் சற்றேனுமனஞ் சலியாதிருந்த இம்மாதிற்கு 'இப்பெருந் துன்ப சாகரத்தை எவ்வாறு நீந்திக் கரையேறுவோம்' என்ற எண்ணம் ஒரு நாளுதித்தது. இவ்வெண்ணம் அநேக நாட்கழிய, ஒரு நாள் சமயம் பார்த்துக் கிழிந்த சேலை யுடுத்திருப்பதாலும், நாணமுடைமையாலும், தன் கணவர் முன்வாராமல் சரீரத்தை மறைத்து வெளியினிற் சற்றுமுகந் தெரியும்படியாக நின்று கொண்டு, தன் கணவரைப் போற்றிப் பயபக்தியுடன் மனதிலெண்ணிய விஷயங்களைச் சொல்லத் துணிந்தாள்.

"கண்ணபிரானது திருவடித்தாமரையைக் குறைவறச் சிந்தையிலுன்னித் துதிப்பவரே! சதுர்வேத சாஸ்திர பாரங்கதரே! அளவிடற்கரிய சிங்கங்களும் வெம்புலிகளும் மதயானைகளும் சஞ்சரிக்கின்ற கானகத்தை அடைந்து விழைசருகருந்தும் மெய்த்தவத்தோரே! தேவரீருக்குக் காதலியாகிய எளியேனிடத்தும், என் பாற்பிறந்த மக்களிடத்தும் நிராசை யுடனும், எந்நாளும் அன்னியர்பாற் சென்றிரவாமலும் இருக்கின்றீர். இதன் பெருமையை யான் அறிந்துகொண்டேனேயாயினும், அடியேன் சொல்லும் வார்த்தையைச் செவிகொடுத்துக் கேட்கவேண்டும். யாழினும் குழலினுமினிய மழலைச் சொற்களோடு கூடிய நமது செல்வப் புதல்வர்கள் நேற்றைத் தினம் அன்னமின்றி வருந்தினார்கள். அவர்கட்கு அன்ன முதலியன அளிப்பது உமது கடமை யன்றோ? வறுமையானது அழகைக் கெடுத்துச் சரீரத்தை ஒடுக்கி, அளவில்லாச் சோம்பலையுண்டாக்கி, நாயகனுக்கும் நாயகிக்கும் பலகலகங்களை விளைத்து, அவமானம், பொய், களவு முதலியவற்றையும் விளைவிக்கும்.

"மானங்குலங்கல்வி வண்மையறிவுடைமை
தானந்தவ முயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்."

ஆகையால் இவ்வுலகில் வறுமைபோல் கொடியது வேறொன்றுமில்லை. ஆதலின் மன்னர் மன்னவனான ஸ்ரீகண்ணபிரானுடன் கூடிக்கல்விக் கடலைக் குடித்தீரென்று உலகத்தினர் சொல்லுகின்றமையால், தேவரீருக்குத் தோழராயும், மகானுபாவராயும், தயாளுவாயும், தாதாவாயுமிருக்கிற அந்த ஜகதீசன்பாற்சென்று, பெருஞ் செல்வத்தைப் பெற்றுவந்து நமது குழந்தைகளுடைய வறுமைப் பிணியை நீக்குவதே தகுதியாகும். நீலமேகம்போலுந் திருமேனியையுடைய அவர் தேவரீரைக் கண்ட அளவிற்றானே சகல சௌபாக்கியங்களையும் தந்தருள்வார் என்று வணங்கிக் கூறினள்.

(இன்னும் வரும்.)

சி. நாராயணசாமி ஐயர். *B.A.L.T.*

யுத்த ஜய வாழ்த்து.

செருமனியா ரியல்புள ரால் செருமனியார் தாங்களெனத்தெரியக்காட்டிப்
பொருமனியா யப்பதகர் புன்செயலை அறவெறுத்துப் பொதுமை நோக்கித்
'தருமநியா யஞ்செயிக்கும் பெருமனியா யம் நசிக்கும்' தவறா தென்ன
வருமன்யார்? மன்னர்பிரான் நமதைந்தாம் ஜார்ஜென்னு மகிபன் அன்றோ?

(செரு ம(ன்)னி ஆர்—யுத்த வன்மை நிலையாக நிரம்பியுள்ள; பொரும் அனியாயப் பதகர்—யுத்தம் செய்யும் அக்கிரம வஞ்சர், பொதுமை—நடுவு நிலைமை, வரும் மன் யார்?—யுத்தம் தொடங்கி வரும் அரசன் யாவன்?)

இத்தகையோன் மித்திர அத்தமனமிலா ஞாலமெலாம்இனிதின் ஆள்வோன்
உத்தமனா யதரும னுதியர்போல் வான்,விஜயை உரிமைப் பேரன்;
சத்தியனாய் உலகசமா தானனாய் விளங் கிதவர்த்தனன் சேய் அன்றோ?
சித்திபெறும் அவன்முயற்சி எனஇவையே எவர்க்குமினி தெரித்திடாவோ

(மித்திர அஸ்தமனமிலா—சூரியாஸ்தமனமில்லாத; (அல்லது) நண்பர்க ளற்றுப்போகாத, விஜயை—விக்டோரியா மகாராணியார். இதவர்த்தனன்—எட்வர்ட் அரசர். தெரித்திடாவோ—தெரிவிக்க மாட்டாவோ?)

[இவன் 'தருமனுதியா போல்வான்' என்றதன் பொருத்தம்

"தருமன்முதல ஐவருமோர் உருவாகி
வந்தமைஇத் தரணிஎல்லாம்
தெரிதரவே" ஐந்தாம்ஜார்ஜ் மன்னன்எனப்
பெயர்புனைந்த செங்கோல்வேந்தன்
கருணையினால் பாண்டவர்கள் அரசிருக்கைத்
தலத்துமுடி கவிகைப்பெற்றான்;
இருநிலத்திற் கொருகுறைவும் இல்லை இனிப்
பெருமகிழ்ச்சி எய்துவீரே."

என யான் எனது அரும்பொருட்டிரட்டிற் கூறிய மகுடாபிஷேக வாழ்த்துக் கவி கொண்டு அறிக.]

வேறு:

மாவலி, சூரன், ராவணன் போல மனஇறு மாப்புடன் அமர்செய்
பாவியாம் ஜர்மர் தலைவனைக் கண்ணன, பார்வதி இளமகன், ராமன்
ஆவலக ரஷ்யா ப்ரான்ஸ்இங்கி லாந்தென் றறைதரு நேசவல் லரசக்
காவலர் வென்று நடுநிலை விளக்கக் கடவுளின் கருணைவா ழியவே. (௩)

(சூரன்—சூரபதுமன், பார்வதி இளமகன்—முருகக்கடவுள்.)

வேறு.

தருமசுதன் தரமிவற்றைத் தரணியெங்கும் நிலைநிறுத்தல் தமக்கு வாய்ந்த
பெருமைமிகு பொதுக்கடனும் புண்ணியமும் ஆகுமெனப் பெரிதுந் தேர்ந்
தொருமையுடன் போர்புரியும் நம்நேச வல்லரசர் உலகு போற்ற [தே.
மருவலரை வென்றிசைகொண்(டு) இரவிமதி உள்ளவரை வாழி வாழி. ()

(ஒருமை—ஒற்றுமை, மருவலர்—பகைவர், இசை—கீர்த்தி.)

*உலகமெனும் நாவாயை ஒருபுகழ் மரம்நாட்டி, யூனியன்ஜாக்
அலகில்பெரும் பாய்விரித்தே, அக்ஷமெனும் புயற்காற்றில் கணுகித்துக்க
வலிமைமிகு பாறையினில் மோதாமல், சுகக்கரையின் மதிக்கோலர்லே
நலவழியே செலவுறச்செய் மாலுமியேந் தைந்தாம் ஜார்ஜ் நாளும் வாழி.

*அரும் பொருட்டிரட்டு, நாவாய்-கப்பல்.

ம. கோபாலகிருஷ்ணையர்.

சிறுவர்க்காகும் கதைப்பூங்கொத்து

(முதல் தொகுதி 368-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கதை—16.

அறிவின்றித் தீர்ப்புரைப்போன் அவமான முறுவன்.

பத்மாவதி என்னும் நகரில் ஒரு தருக்கன வீட்டில் திருடன் புகுந்து அவன் சொத்துக்களை அடிக்கடி அபகரித்து வந்தான். தருக்கன் திருடனைப் பிடிக்கப் பலநாள் முயன்றான். ஒருநாள் அவன் திருடனை ஆபரணமும் கையுமாகவே பிடித்து நியாயாதிபதி முன் நிறுத்தினான். நீதிபதி தருக்கனை நோக்கி "எல்லாம் சரி, இவனே உன்பொருளை அபகரித்தவன் என்பதற்கு யார் சாக்ஷி? என்ன, அவன், "சாக்ஷி இருந்தாற் கொண்டு வரமாட்டேனா?" என்றான். "சாக்ஷியில்லா விவர்த்தம விசாரிக்கப் படமாட்டாது" என்று நீதிபதி ஒரே பிடிவாதமாகக் கூறவே, தருக்கன் வயிறெரிந்து "ஆபரணத்தை நேரே கண்டும் இம்மூடன் சாக்ஷி வேண்டு மென்கிறான்! இது என்ன கர்மம்!" என நொந்த மனத்துடனும் கோபத்துடனும், "சரி போ!" எனத் திருடனைக் கழுத்தைப் பிடித்து வெட்டித் தள்ளினான். மூடத் திருடன "அதற்கு யார் என்ன செய்கிறது? அகாலத்தில் உன் வீட்டிற்கு நான் வரும் விஷயம் நீ என் முன்பே ஒருவர்க்கும் தெரிவிக்க வில்லை? உனக்கு எப்படி சாக்ஷி இருக்கும்?" என்றான. இதுகேட்ட நியாயாதிபதி வெட்கித் திருடனைச் சிறை செய்வித்தான்.

கதை—17.

பேதையர் துன்பமே பெறுவர் தம் பேச்சினால்

ஒரு ஊரில் சுகுப்தன் என்ற வண்ணான் இருந்தான். அவனுக்கு ஒரு கழுதை உண்டு அது ஆகாரக் குறைவால் இளைத்திருந்தது. வண்ணானுக்குப் புலித்தோல் ஒன்று ஒரு நாள் கிடைத்தது. அவன மகிழ்ந்து "இது தான் சரி! இத்தோலைக் கழுதைக்குப் போர்த்து இரவில் வயல்களில் மேய விடுவேன். பார்த்தோர் இது புலி யென்று பயந்து ஓடி விடுவர் கழுதை பாடு கொண்டாட்டம் தான்" என நினைத்து, அப்படியே செய்து வயலில் விடுத்தான். அன்று முதல் கழுதை வயிறார உண்டு கொழுத்துக் கொழித்து

வந்தது. ஒருநாள் வழக்கப்படி அது மேய்ந்து கொண்டிருந்த பொழுது தொலையில் ஒரு பெட்டைக் கழுதை சத்தமிட, இக்கழுதை வெகு சந்தோஷத்துடன் தன பெருவாய் திறந்து விடாமற் கனைத்தது. வயற்காய வர் உண்மை யறிந்து அதைக் காலொடித்துக் கொன்றனர்.

பொல்லாது சேர்ந்து மறைந்தொழுகும் பேதைதன்
சொலலாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—குமரகுருபரர்.

கதை—18.

தர்ம சீலனே தரும்பேறு உறுவன்.

உஜ்ஜயினி நகரில் விக்ரமன் என்ற தர்மகுண முள்ள அரசன் இருந்தான். அவனது தயாள சிந்தையைச் சோதித்தறிய அமுதசுரபியாகிய காம தேனுவே தேவ லோகத்திலிருந்து வந்தது. அது விக்ரமன் வரும் வழியில் சேற்றிற் புதையுண்டு வருந்துவது போல் நடித்தது. விக்ரமன் அதற்கிரங்கி அப் படுசேற்றினின்றும் தன் சொந்தக் கையாலே அதை எடுத்துக் கரையேற்றி அதற்குச் சுத்த ஜலமும் புல்லும் தந்து உபசரித்தான். தேனு அவனது 'செய்யாமற் செய்த உதவி'யை வியந்து. 'விக்ரம! நான் தேவசுரபி. உன்னைச் சோதிக்கவே இங்குவந்தேன். உன் அறச்செயல் கண்டு மகிழ்ந்தேன் நீ வேண்டும் வரம் யாது?'' என்ன, விக்ரமன், அதை வணங்கி "இன்று முதல் நீ அடியேன் மனையிலேயே அமர்ந்துறைய அருள் புரிக''என வேண்டினன். தேனுவும் இசைந்தது. விக்ரமன் விசேஷ சீரும் சிறப்பு முற்று எல்லோரையும் இனிது காத்தான்.

வி. சு. நடராஜன்.

சமாசாரக் கொத்து.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம்:—இசன் 16—ஆவது வருஷ பூர்த்தி மகோத்ஸவத்தைத் திருநெல்வேலியில் கொண்டாடவேண்டுமென்று அவ்வூராரின் பிரதிநிதிகளாக ஸ்ரீ: M. கிருஷ்ணராவ், ஸ்ரீ. காந்திமதி நாதபிள்ளை, ஸ்ரீ: புன்னைவனநாத முதலியார் ஆகிய மூவரும் ஸ்ரீ ம. கோபால கிருஷ்ணையரைச் சென்ற மேமீ வருடாந்தக் கூட்டத்திற் கேட்டுக் கொண்டதும், அதற்கவர், நெல்லை வாசிகள் இச்சங்க மகோத்ஸவத்திற்கான சகல சௌகரியங்களையும் செய்து கொடுப்பார்களாயின், அவர்கள் விருப்பிற்கிணங்கத் தமக்குத் தடையேதுமில்லை யெனக் கூறியதும் நம் நேயர்கள் அறிவர். சென்ற டிசம்பர்மீ நெல்லைவாசிகள் 21-பேர்கள் கையெழுத்திட்டு ஒரு பெருஞ் சபைகூட்டி இச்சங்க 6-ஆவது உத்ஸவம் அங்கு இனிது நிறைவேறுதற்கான காரியங்களைச் செய்து முடிக்கத் தீர்மானித்தனரென்றும், அதற்காக ஸ்ரீ T. B. கிருஷ்ணசாமி முதலியார் M.A.யைத் தலைவராகக் கொண்டு ஒரு உட்கழகம் ஏற்படுத்தப் பட்டதென்றும் தெரியலானோம். இக்

கழகத்தினரால் ஸ்ரீ C. S. இராமலிங்கம் பிள்ளையும் ஸ்ரீ: M கிருஷ்ணராவும் மதுரை சென்று ஸ்ரீ: ம. கோபால கிருஷ்ணையரைக் கண்டு பேசி, சங்க சம்பந்தமாக அவர் எதிர்பார்க்கும் சௌகரியங்களையும் பிறவிஷயங்களையும் அறிந்து வருமாறு சென்ற ஜனவரி மீ கடைசியில் அனுப்பப்பட்டு ஜனவரி மீ 29உ யன்று மதுரை வந்தனர். 4உ யன்று இந்நெல்லைப் பிரதிநிதிகளின் விருப்பத்திற்கிணங்கக் கூட்டப் பெற்ற ஓர் விசேஷக் கூட்டத்தில் ஸ்ரீ: C. S. ராமலிங்கம் பிள்ளை 'தமிழ்ப் பெருமை'யைப் பற்றிப் பேசி, தாம் வந்த காரணத்தை அறிவித்து, தாமும் ராயரும், நெல்லை வாசிகளின் விருப்பின்படி, இச்சங்க 16-ஆவது மகோத்ஸவத்தை நெல்லையிற் கொண்டாடுமாறு யாவரையும் மீநகரில் அழைக்க வந்திருப்பதாகவும், இச்செய்தி அங்குள்ளோர் யாவர்க்கும் பெருமகிழ்ச்சியே விளைத்திருப்பதால் யாவரும் அவசியம் வரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். உ யன்று கூடிய கூட்டத்திலும் ஸ்ரீ. இராமலிங்கம்பிள்ளை ஸ்ரீ கோபாலகிருஷ்ணையரது முயற்சியை வியந்து, மறுபடியும் சபையார் யாவரையும் வருஷோத்ஸவத்திற்கு நெல்லை வருமாறும், உத்ஸவ சம்பந்தமாக சகல சௌகரியங்களும் அவசியம் செய்து கொடுக்கப்படுமென்றும் வற்புறுத்திக் கூறினார். நிற்க.

வந்த பிரதிநிதிகள் இருவரும் தாம் கேட்டுணர வேண்டிய விஷயங்களை அக்ராஸநரிடமிருந்து அறிந்து கொண்டு சென்றிருக்கின்றனர். வருஷோத்ஸவ சம்பந்தமாக அவர்களும் அவர்களை அனுப்பிய ஊரார்களும் செய்து வரும் ஏற்பாடுகளை நமக்கு அறிவித்தவுடன் நம் நேயர்களுக்கு அறிவிப்போம்.

குட்டிலோட்டி என்ற அழகிய நல்லூர்ச் செந்தமிழ்க் கலா சபையின் 4-ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்:—இது நாம் முன்பு அறிவித்துள்ளபடியே பிப்ரவரி மீ 10, 11உ களில் அவ்வூர் விநாயகர் கோவில் விஜய மண்டபத்தில் இனிது நிறைவேறியது. இம்மகோத்ஸவத்திற்குச் சுற்றுவட்டைகளிலிருந்தும், திண்டுக்கல், சாத்தூர், விருதுபட்டி, திருநெல்வேலி முதலிய இடங்களிலிருந்தும், திரளான ஜனங்கள் வந்திருந்தனர். இம்மஹோத்ஸவத்திற்கு அக்ராஸனாதிபதியவர்களான ஹரித்வாரமங்கலம் ஸ்ரீமான் வா. கோபாலசாமி ரகுநாத ராஜாளியார் முதலிய யாவரையும் சபையோர் 10உ யன்று சுமார் 3-மணிக்கு மேளதாளங்களுடன் சபைக்கு அழைத்து வந்தனர். அக்ராஸநரையும் பிறரையும் சபையோரால் பயிற்றப்பட்ட சிறுவர்கள் மலர்தூவி, வாழ்த்தினர். பிறகு இறைவன் வாழ்த்தும் அரசர் வாழ்த்தும் பாடியபின், இச்சபை நிரந்தர அக்ராஸநாதிபதியாகிய ஸ்ரீ ம. கோபால கிருஷ்ணையர், ஸ்ரீ ராஜாளியார்க்கு நல்வரவுப் பத்திரம் வாசித்தனர். அக்ராஸநர் அதற்கு சமயோசிதமாக

விடை கூறியதும், காரியதரிசி ஸ்ரீ க. நா. முத்துக் காமாக்ஷிபிள்ளை சங்க வருடாந்த அறிக்கை வாசித்தனர். இதன் பின் "இனறமிழ்ப் பற்றிய இருவர் சம்பாஷணை" நடந்தேறியது. இஃதானதும், 'ஹரிதாஸர்' என்ற ஸ்ரீ; சா. நா. சொக்கப்ப ரெட்டியார், 'திருமங்கை ஆழ்வார் சரித்திரம்' உரைத்தனர். அநந்தரம் "வறுமையிற் செம்மை" யைப் பற்றி ஸ்ரீ எ. நா. கிருஷ்ண ரெட்டியாரும், 'உபந்யாசம்' என்பதைப்பற்றி ஸ்ரீ தி. கி. வேங்கடராமையருமே பேசினர். இதன் பின் பாவலர் அமைச்சர் படைவலர் என்னும் மூவரிற் சிறந்தோர் யாவர்?" என்பதைப் பற்றிச் சபையோர்களாற் பயிற்றப் பட்ட சிறுவர் மூவர் தனகு சம்பாஷித்துப் 'பாவலனே சிறந்தவன்' என ஸ்தாபித்தது வியக்கத்தக்கதாக இருந்தது. கடைசியில் ஸ்ரீ ம. கோபால கிருஷ்ணையர் "பெண்கல்வி" யைப் பற்றிப் பிரசங்கித்ததும், அக்ராஸநாயகிநுக்கும் ஏற்ற முடிவுரை கூறிச் சபையை மகிழ்வித்தனர்.

11 சுமார் 10-மணிக்கு மறுபடியும் சபை ஸ்ரீமதி ராஜாளியாரின் அக்ராஸநத்தின் கீழ்க்கூடிய போது, வழக்கப்படி இறைவன் வாழ்த்தும் அரசவாழ்த்தும் கூறப்பட்டன பின்பு மதுரை ஸ்ரீசுந்தரசாமிஐயர், பன்னொணமணியத்தில் உள்ள 'ஞானச் சிறப்'பைப் பற்றிய ஓர் கட்டுரை எவர் மனதிலும் நன்கு பதிய ஓதினர். இஃதானதும் விருதுபட்டி ஸ்ரீ குருமூர்த்தி ஐயர் 'சரித்திர ஆவசியக'த்தையும், மதுரை ஸ்ரீரா ங்கசாமையங்கார் 'வைகறைத்துயிலெழு'கலையும் ஹரிதாஸ என்ற ஸ்ரீசொக்கப்ப ரெட்டியார் 'அவதார மகிமை'யையும் ஸ்ரீ தி. கி. வேங்கடராமையர் "மானிடர் அருஞ்செல்வ"த்தையும், ஸ்ரீ பாலசுப்பிரமணியபிள்ளை 'கல்வி'யையும், சபையின் உப-அக்ராஸநாதிபதி ஸ்ரீ ந அ. வேங்கடசாமி ரெட்டியார் 'தமிழ்ப் பெருமை' யையும், (தி. இ) ஸ்ரீ சாமி சுப்பையநாயுடு காரு 'ஊக்கம்' என்பதையும், திண்டுக்கல் ஸ்ரீ நா. ச வேங்கடப்ப ரெட்டியார், "குழந்தைகளைக் கவனிக்கும் முறை" யையும், திருநெல்வேலி ஸ்ரீ எம். கிருஷ்ணராவ் "கூட்டுறவு" என்பதையும் பற்றிப் பேசினர். அக்ராஸநர் வழக்கம் போல யாவிநுக்கு முடிவுரை கூறச் சபை சுமார் 1—30 மணிக்குக் கலைந்தது.

பிறகு சுமார் 3—30 மணிக்கு சபை மறுபடியும் ஸ்ரீராஜாளியார் அக்ராஸநத்தின் கீழ் சபை கூடிய போது, கடவுள் வாழ்த்தானதும், 'கல்வியும் செல்வமும்' என்பதைப்பற்றி மாணவர் இருவர் பலரும் கள் விளங்கும்படி நன்கு சம்பாஷித்தனர். பிறகு ஸ்ரீ சுந்தரசாமி ஐயர் 'தமிழின் தற்காலநிலைமை'யையும் விருதை ஸ்ரீமுத்துப்பழனி ஆசாரி 'ஒற்றுமை'யையும், ஸ்ரீ ரா. சுந்தரராஜையங்கார் 'நானிலம் யாவுமோர நாடகசாலையே' என்பதையும், திண்டுக்கல் ஸ்ரீ சிவசிதம்பரம் பிள்ளை 'திருநீறம்பல்' என்பதையும் ஸ்ரீ முத்துக்காமாக்ஷியர்பிள்ளை "பிரோபகாரம்" என்பதையும், அருப்புக்கோட்டை ஸ்ப

அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் ஸ்ரீ: வே. முத்துசாமி ஐயர் எம் ஏ எல் டி "அறச் சிறப்பு" என்பதனையும், மதுரை ஸ்ரீ ப. ரா ஐயாசாமி ஐயர் B. A. "மகான்மலபாரி"யையும் உப-அக்ராஸநாதிபதி ஸ்ரீ: K. நரசையர் 'குசேல சரித்திர'த்தையும் பற்றிப் பிரசங்கித்ததும், பேராசிரி ஸ்ரீ லக்ஷ்மண சர்மா, சபையோர் அதிசயிக்குமாறு தம 'அஷ்டாவதானசக்தி'யைக் காட்டினர் பிறகு வந்தோர் அனைவரையும் வைத்து ஓர் புகைப்படம் எடுக்கப்பட்டது. அநந்தரம் ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் "சங்கங்களும் பிரசங்கங்களும்" என்பதைப் பற்றியும் "நட்பாராய்ச்சி"யைப்பற்றியும் உபந்யாசம் செய்ததும், அக்ராஸநாயகர், யாவருக்கும் அதி அழகாகவும் சமயோசிதமாகவும் முடிவுரை கூறி, சபை செய்து வரும் வேலையையும், அதன் நிர்வாக அக்ராஸநாதிபதியின் அபிமான ஊக்கத்தையும் வியந்து, சபைக்கட்டிட நிதிக்கு ரூ-10-ம், அடுத்துள்ள ஓர் கோவில் கட்ட ரூ 10-ம் ஆக 20 ரூ அளித்தனர். ஸ்ரீ ம. கோபால கிருஷ்ணையர் ரூ 10ம் ஸ்ரீ வேங்கடராமையர் 3 ரூபாயும் தர வாக்களித்தனர். இச்சங்க விஷயமாக மிக்க அபிமானமும் ஊக்கமும் காட்டி உழைத்து வரும் ஸ்ரீ சாமிகப்பைய நாயுடு, கொக்குலாஞ்சேரி ஸ்ரீ சுந்தரமையர். ஸ்ரீ இராமசாமி அண்ணாவியார் முதலியோரது நன் முயற்சியும், தன்னலங்கருதாத் தகைமையும் பெரிதும் பாராட்டத்தக்கவையே. அநந்தரம் ஸ்ரீ கோபாலகிருஷ்ணையர் விக்நேச்வர பூஜை நடத்தி மங்கலவாழ்த்துக் கூறவும் சபை இனிது நிறைவேறியது. அன்றிரவு மாணவர்களால் "சம்பந்தரும் சோழனும்" என்ற சரித்திரம் 'ஸீன்'களுடன் நாடகரூபமாக நன்கு நடித்துக் காட்டப்பட்டது.

முனிஷிப் பரீக்ஷை:— ஐரோப்பியர்களுக்கும், அவர்களிலும் முக்கியமாக துரைத்தன உத்யோகஸ்தருக்கும் தமிழ் முதலிய ஸ்வநாட்டு மொழிகளையும், பாரஸிகம் அரபி, உர்து முதலியனவும் கற்பிக்க வரும் ஆசிரியர்களின் தகுதியை ஆராயவும், அங்ஙனம் தகுதியுடையோராகத் தெரிந்தெடுக்கப்படுவோரது பெயர் முதலியவற்றைப் பிரசித்தம் செய்யவும் வேண்டுமென்ற நன்னோக்கத்துடன், "ஓரியண்டல் லாங்வேஜ் டீச்சர்ஷிப் எக்ஸாமினேஷன்" என்ற 'திசைமொழிப் பாஷை உபாத்தியாயப் பரீக்ஷை' இனி நடைபெற ஏற்பாடாய் விட்டது. இப்பரீக்ஷை அவசியம் நடைபெற வேண்டுமென ஆலோசனை கூறியோர் கலகத்தாவில் உள்ள "போர்ட் ஆப் எக்ஸாமினர்ஸ்" என்ற "பரீக்ஷகர் சங்கத்தா"ரே. இவ் ஆலோசனை துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டு விட்ட விஷயம் நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் உர்து இவைகளில் முற்கூறிய உபாத்தியாயப் பரீக்ஷை நடக்கும். யாரும் எந்தப் பாஷையிலும் இப்பரீக்ஷைக்குப் போகலாம். இதில் தேறுவோர்க்கு யோக்யதாபத்திரம் அளிக்கப்படும். தேறியோரது பெயர

‘போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட்’டிலும் ‘இந்தியா கெஜட்’டிலும் வரும். தேறியோர் பரீக்ஷகர்களாலேயே முனிஷிகள் வேண்டுவோராகத் தக்க ஸர்டிபிகேட்டுடன் அனுப்பப்படுவார்கள். இப்பரீக்ஷை சம்பந்தமான சகல விதிகளையும் அறிய விரும்புவோர் “கல்கத்தாவில் ‘கவுன்ஸில் ஹவுஸ் ஸ்ட்ரீட்’டில் உள்ள ‘போர்ட் ஆப் எக்ஸாமினர்ஸ்’க்கு எழுதி அறிக.” பிற உள்நாட்டுப் பாஷைகளிலும் அந்தந்த பாஷை சம்பந்தப்பட்ட மாகாண நகரங்களில் நடக்குமாம். நிற்க.

இப்பரீக்ஷையால் நன்மை ஒருவாறு சித்திக்கக் கூடியதே யெனினும், கனித தமிழ்ப் பரீக்ஷை, வித்வான பரீக்ஷை முதலியவற்றின் அபிவிருத்திக்கு இஃதொரு தடையாய் விடும் என்பது இனிப் போகப் போகத் தெரியவரும். ஏனெனில், தமிழின் பொருட்டுத் தமிழ் கற்காவிடினும் வயிறறுப் பாட்டின் பொருட்டுத் தமிழ் கற்றுத்தீர வேண்டியவர்களான நினைந்து அதனைக் கற்கநினைக்கும் அற்ப சொற்ப ஜனங்களும், அதி சுலப வழியில் தமக்குப் பொருள் வருவாய் ஏற்படுவதைக் காணும் போது தனித்தமிழ் மிகக் கற்க இருக்கும் தமது எண்ணத்தைக் கைவிடவே எண்ணுவாரன்றோ?.

புத்தக மதிப்புரை.

அறுபத்தோரு வருஷப் பஞ்சாங்கம்;—இது மதுரை வியாபாரியும் சோதிடநூல் வல்லுநரெனக் கியாதி பெற்றோருமான ஸ்ரீ — S. கூடலிங்கம் பிள்ளை அவர்கள் தொகுத்து வெளிப்படுத்தியதாகும். இவ்வரிய பெரியநூல் ஜோதிஷ ஆராய்ச்சியுள்ளோர்க்கு மட்டுமின்றித் தமிழறிந்தோர் யாவர்க்கும் மிக்க பிரயோசனம் தரும் ஒரு அரும்பெரும் பொக்கிஷமாகும் புத்தகத்தின் உள்ளுறையிற் காணப்படும் பல அரிய விஷயங்களே இதை உணர்த்தப் போதியவையாகும். இது கலி, சாலி, கொல்லம், பசலி, தமிழ், இங்கிலீஷ், துலுக்கு முதலிய ஆண்டுகளும், தமிழ், துலுக்கு மாதத் தேதிகளும் வாரம் திதி நக்ஷத்திர யோகம் கரணம் முதலிய எல்லா அங்கங்களும், கிரக பாத சாரங்கள் முதலிய பல ஜோதிட விஷயங்களும் கொண்டிருக்கிறது. அன்றியும் இது உலகில் நிகழ்ந்த பல குறிப்புக்கள் முதலிய அரிய விஷயங்களும் நிறைந்து நன்றாக அச்சிட்டு வெகு அழகாக காலிகோ கிலட் கட்டிடத்துடன் விளங்குவதாகும். இதனை ஆக்கி அச்சிட்டு நம்மவர்க்கு உதவி நமக்கும் ஒரு பிரதி நம் பார்வைக்கு அனுப்பிய பிள்ளை அவர்களைப் பன்முறை மனமாரப் புகழ்கின்றோம். தமிழர் ஒவ்வொருவர் வீட்டிலும் இந்நூல் இருக்கத் தக்கதாதலின், யாவரும் இந்நூலை ஆதரித்துப் பிள்ளையவர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் பிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம். ஆநந்தாதி ஆநந்தாக இவ் 61 வருஷப் பஞ்சாங்கத்தின் விலை ரூ 5. வேண்டுவோர் “ஜோதிட சாஸ்திரி S கூடலிங்கம் பிள்ளை, புதுமண்டபப் புத்தகசாலை, மதுரை” என்ற விலாஸத்துக்கு எழுதுக.

மதுரை மாலை:—இது மதுரையின் சிறப்பை பற்றிய நூறு வெண்பாக்களாலாகிய நூல். இதனை இயற்றியவர் காலஞ்சென்ற மகாவித்வானாகிய ஸ்ரீமத் சபாபதி முதலியாரவர்கள். இதன் விலை அணா 2. ஸ்ரீ வி. கோ. நடராஜன், தன் தந்தை ஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பி. ஏ. அவர்கள் பதிப்பித்த இந்நூலை, நமது விவேகோதய அபிவிருத்தி கருதி ஒரு அணா ஸ்டாம்பு நமக்கு அனுப்புவோர்க்கு விவேகோதயத்துடன் சேர்த்து அனுப்புமாறு சில பிரதிகளை அனுப்பினமைக்கு வந்தனம்.

பத்திராதிபர்.

தபாலாபீஸ் அறிவிப்பு:— போஸ்டு மாஸ்டர் ஜெனரல் நமக்கு ஓர் சுற்றுக் கடிதம் அனுப்பியிருக்கிறார். அதிலிருந்து தஞ்சை ஜில்லா காரைக்கால் பீச்சிலும், மலபாரில் கீனலூரிலும் புதிதாக தபாலாபீஸ் திறந்திருப்பதாகவும், கோதாவிரி ஜில்லா இந்துகுருப்பேட்டையிலும் தஞ்சாவூர் ஜில்லா காரைக்கால் அக்ரகாரத்திலும் மலபார் ஜில்லா கோட்டாவிலும் உள்ள ஆபீஸுகள் மூடியிருப்பதாகவும், 'ராணிப்பேட்டை' என்ற ஆபீஸை 'ராணிப்பேட்' என்று மாற்றியிருப்பதாகவும், மைசூர் ஜில்லா மாகட்டியிலும், மதுரை ஜில்லா கீரனூரிலும் உள்ள பிராஞ்சு ஆபீஸ்களை கம்பையின்ட் சப் ஆபீஸாக மாற்றியிருப்பதாகவும் தெரிய வருகிறது.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் நூல்கள்.

மனம்போல வாழ்வு:—இஃது இம்மை மறுமை இன்பங்களை அடைதற்குரிய நெறிகளைத் தெளிவாகக் கூறும் அரிய நூல். இது முற்றிலும் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு.

மெய்யறிவு:—இதில் அறமும் பொருளும் இன்பமும் வீடும் அவற்றைச் செய்யும் வழிகளும் பல உபமானங்களோடு மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள. இது நீதிநூல்களின் காரணமெனத் தக்கது.

அகமே புறம்:—இகத்திலும் பரத்திலும் மேலான நிலைகளை அடைதற்குரிய மார்க்கங்களை வரிசைப்படுத்தி இனிமையாகக் கூறும் ஒரு சிறந்த நூல். இதனை ஒவ்வொருவரும் கற்றல் இன்றியமையாதது.

வலிமைக்கு மார்க்கம்:—இதில் எளிய நிலைமையை எய்தியுள்ளோர் வலிய நிலைமையை எய்துதற்குரிய வழிகள் விரிவாகவும் தெளிவாகவும் யாவரும் கைக்கொள்ளத்தக்க விதத்திலும் கூறப்பட்டுள்ளன. இதுவும் வெளிவந்து விட்டது.

ஒவ்வொன்றின் விலையும் அணா எட்டு. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்,
பெரம்பூர், சென்னை.

இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்தியசாலை எது?

1881-ஆம் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ர

300 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1.

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு கனமாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்

இந்த

ஔஷதசாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதருமம், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம்செய்கிறார்கள்

முதன்மையான

மருந்து சென்ற 35 வருஷ காலமாகப் உபயோகிப்போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

32 மாத்திரையின் விலை ரூ 1.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்
45, மேலக் கோபுர வீதி,
மதுரை.

இருமல், கபம் காசம் இவைகளுக்கு சிறந்த மருந்து

காசாந்தக

மாத்திரைகள் டப்பிக்கு விலை ரூ 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள். எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறோம்.